விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 22 வியாழக்கிழமை (05.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 77

## சம்பந்தன், சுமந்திரன், மாவை அரசியலிலிருந்து வெளியேறுக



### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(வவுனியா)

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர் அரசியலிலிருந்து வெளியேற வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு 23

## தந்தை, மகன் மீது வீடு புகுந்து வாள்வெட்டு

### புதிய செம்மணி வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள வீட்டில் நேற்று இரவு இனந்தெரியாத குழுவினர் புகுந்து தந்தை மகனை வாளினால் வெட்டிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 24

## கோட்டா அரசு ஆட்சிக்கு வந்த பின்னர்

# அச்சமான சூழ்நிலை ஏற்படுத்தப்படுகின்றது



### மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசிய இயக்குநர் மீனாக்சி கங்குலி

(நியூயோர்க்) கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இலங்கையில் கடுமையான முறையில் அச்ச சூழல் ஏற்படுத்தப்படுகின்றது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார். 23

## அபிவிருத்தி பின்னடைவால் ஏற்பட்ட சவாலை வெற்றி கொள்வதே

### மக்கள் மைய பொருளாதார மாதிரியின் நோக்கம் - ஜனாதிபதி

(கொழும்பு)

தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் முக்கிய சவால் உடனடி பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதென்றும் கடந்த காலத்தில் நாம் முகங்கொடுத்த பாதுகாப்பு தொடர்பான பல பிரச் 24

## வேலையற்ற பட்டதாரிகளின் அரச நியமனங்கள் இரத்து

### தேர்தல் ஆணைக்குழு உத்தரவு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கான நியமனங்களையும், பொது சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதையும் நிறுத்துமாறு தேர்தல் ஆணைக்குழு உத்தரவிட்டுள் 23

## நடந்து சென்ற பெண்ணின் தாலிக்கொடி அறுப்பு

### பருத்தித்துறை தம்பசிட்டியில் சம்பவம்

(கரணவாய்)

வீதியால் நடந்து சென்ற பெண்மணி ஒருவரின் தாலிக்கொடி வழிப்பறிக் கொள்ளையர்களால் கொள்ளையிட்டு செல்லப்பட்டுள்ளது. 23

## பயங்கரவாத தடுப்பு பிரிவால்

### வடமராட்சி கிழக்கில் குடும்பஸ்தர் கைது

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு, கேவிலைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் பயங்கர 24

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடியலைந்த

### தாய் ஒருவர் மரணம்



(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடியலைந்த தாய் ஒருவர் நேற்று மரண 24

## ஐ.நாவிலிருந்து இலங்கை வெளியேறியது நாட்டுக்கு நன்மை பயக்காத ஒன்று

### நெதர்லாந்து தூதுவரிடம் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கை விலகியது நாட்டுக்கு நன்மை பயக்காத ஒன்றாகும் என நெதர்லாந்து தூதுவரிடம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். 23



## சுயேட்சைக்குழு ஒன்று யாழில் கட்டுப்பணம் செலுத்தியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை சுயேட்சைக் குழு ஒன்று செலுத்தியுள்ளது.

மயில்வாகனம் விமலதாஸ் என்பவரே சுயேட்சைக் குழுவாக போட்டியிடுவதற்கு பணம் செலுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 23

## செய்தி தலைப்பில் திருத்தம்

இன்றைய வலம்புரியின் 5ம் பக்கத்தில் வெளியான செய்தியின் தலைப்பினை "ஐ.நா தீர்மானம் தொடர்பில் சுமந்திரனை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கும் முன்னணியின் சட்டத்தரணி" என திருத்தி வாசிக்குக.


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# புலிகளுக்கு எதிரான மனோநிலையை சுமந்திரன் எம்.பி கொண்டுள்ளார்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

விடுதலைப்புலிகளுக்கு எதிரான மனோநிலையை சுமந்திரன் எம்.பி கொண்டுள்ளார் என சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். மேலும்,

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து சுமந்திரன் பொது வெளியில் தெரிவித்த கருத்தை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ் இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய அத்தனை இயக்கங்களும் தமது உயிர்களை துச்சமென மதித்து போராட்டக் களம் புகுந்திருந்தனர். கால மாற்றங்களுக்கேற்ப ஆயுத இயக்கங்கள் ஆயுதப் போராட்ட வழியிலான தமது பயணங்களை மாற்றியமைத்து கொண்டன. இந்தப் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இறுதி வரையில் விடுதலைக்கான ஒரே. வழியாக ஆயுதப் போராட்டத்தையே முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இது வரலாறாக இருக்க ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்று ஜனநாயக வழி வந்த அமைப்புக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருங்கிணைப்பில் 2001ஆம் ஆண்டு தமிழின விடுதலைக்கான அரசியல் ரீதியான நகர்வினை ஆரம்பித்திருந்தன .கடந்த கால கசப்புணர்வுகள் அனைத்தையும் மறந்து தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட ஏனைய விடுதலை இயக்கங்கள் கரம் கோர்த்து ஒன்றாக செயற்பட்டனர். சுமந்திரனின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களால் ஆயுதப்போராட்டத்திற்கு வந்த இயக்கங்கள் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் பழைய கசப்பான சம்பவங்களை கிளறி விரிசல்களை ஏற்படுத்த பார்க்கின்றார்.

இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளுக்கு எதிரான மனோநிலையையும் கொள்கை ரீதியான முரண்பாடுகளையும் கொண்டிருக்கும் சுமந்திரன் போர்ச்சூழல், நெருக்கடியான நிலைமைகள் அனைத்தும் நிறைவுக்கு வந்த பின்னரே அரசியலில் பிரவேசித்தார்.ஆகவே, விடுதலைப் போராட்டத்தில் வித்தாகியவர்களின் அர்ப்பணிப்பை இவர் உணர்ந்திருப்பதற்கு எந்த விதமாக வாய்ப்புக்களும் இல்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது தனிப்பட்ட கருத்தியலை பொது வெளியில் வெளிப்படுத்தி ஒட்டு மொத்த விடுதலை இயக்கங்களையும் அகௌரவப்படுத்தியுள்ளார என்றார்

(ம-299)

### வடக்கு கிழக்கு மாகாணங்களில்

# இராணுவம் சோதனை என்ற பெயரில் மக்களை துன்பப்படுத்துகின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன்

தமிழ் பிரதேசங்களில் யுத்த காலத்தில் எப்படி மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வந்தார்களோ அப்படியான ஒரு சூழ் நிலை தற்போது படிப்படியாக ஏற்பட்டு வரும் சூழ் நிலை காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன் கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்...

தற்போது தமிழ் பிரதேசங்களில் இராணுவத்தின் சோதனைச்சாவடிகள் அதிகம் காணப்படுகின்றது.மக்களை ஏற்றி இறக்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. வயோதிபர்கள், பெண்கள்.கர்ப்பிணித்தாய்மார் என்று பார்க்காது வெயிலில் இறக்கி நடந்து செல்ல வைக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

சோதனை என்கின்ற வகையில் மக்களை துன்பத்திற்கு உள்ளாக்குகின்றனர். வடக்கு-கிழக்கில் மாத்திரமே இந்த சோதனைச்சாவடிகள் அமைந்துள்ளன என்றார்

(ம-285)

# மரண அறிவித்தல்



தோற்றம்
1943 . 11 . 30

மறைவு
2020 . 03 . 03

### திருமதி இராசலிங்கம் பரமேஸ்வரி

"முல்லை" கரணவாய் தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் பரமேஸ்வரி நேற்று முன்தினம் *(03.03.2020)* செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் சபாபதிப்பிள்ளை-மீனாட்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பூமணி, சுப்பிரமணியம், யோகராசா, வள்ளியம்மை, இந்திராணி, காலஞ்சென்ற பாமிளா ஆகியோரின் அருமைச்சகோதரியும் வெண்மதி, கணேசலிங்கம்(சுவிஸ்), சுமதி, சிவதர்சன்(கனடா), சபாலிங்கம்(லண்டன்), மதியழகன்(பிரான்ஸ்), கலையரசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாஸ்கரன்(டோகா), ஜெயராணி (சுவிஸ்), குகதாசன், சிவாஜினி (கனடா),சித்திரா(லண்டன்), தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் கீர்த்தனா, மதிப்பிரியா, சஞ்சிகன், ஜெசிந்தன், றிசபன், ஜெகிசன், மதிதாசன், மதுசாளினி, நிவேகா, அமரர் ஓவியா மற்றும் நந்திதா, அஸ்வின், நிகிதன், நிறோசன், நித்திலன், ஆதித்யா, நவிஸ்னா, சஸ்விகா ஆகியோரின் அருமைப்பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(05.03.2020)*ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் *1.00* மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசந்திட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
"முல்லை"
கரணவாய் தெற்கு, கரவெட்டி
குடும்பத்தினர்
0778917781
(c-2480)

# மரண அறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை குமாரசாமி

சாவகச்சேரி மறவன்புலவைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கந்தரோடையில் வசித்தவருமாகிய திருமதி வ்ள்ளியம்மை குமாரசாமி அவர்கள் நேற்று*(04.03.2020)* புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதி- சிதம்பரம் தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வியும் அமரர் தம்பாப்பிள்ளை குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும் அமரர் செல்லப்பா, அமரர் மாரிமுத்து, அமரர் சபாபதி அவர்களின் பாசமிகு சகோதரியும் புஸ்பமலர், அமரர் கந்தசாமி, அமரர் சின்னம்மா அவர்களின் மைத்துனியும் சரவணபவனின் பாசமிகு தாயும் கஜேஸ்வரா, அனுசியா, கஜராஜ், விஜிதா, கஜலக்ஸ்மி,சசிகரன், மதியுகன், ரேணுகா, கேசராஜ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சதுஸ்ரிகா, சபரிஷன், கபினாஸ், தஸ்வின், திபர்ஷன், கோஷினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(05.03.2020)* வியாழக்கிழமை நண்பகல் *12.00* மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சங்கப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
சித்தியார்வளவு, கந்தரோடை
சுன்னாகம்
மகன் குமாரசாமி சரவணபவன்
0770224681, 0774046585
(2481)

# தோட்டத் தொழிலாளர்களின் 1000ரூபா கொடுப்பனவு இதுவரை இணக்கப்பாடு இல்லை -அமைச்சர் ரமேஷ்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபாய் நாளாந்த வேதன உயர்வு தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இதுவரையில் இறுதி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை என பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பதிரன தெரிவித்துள்ளார்.



குறித்த விடயம் தொடர்பில் மார்ச் முதல் வாரத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்படவுள்ளதாக முன்னர் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில், இதுவரையில் பேச்சு வார்த்தை இடம்பெற்றுள்ளதா? என வினவியபோது, இதுவரையில் தங்களால் பேச்சு வார்த்தை நடத்த முடியாது போயுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பதிரன குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்ற நிலையில், பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள இதுவரையில் முடியவில்லை.

எவ்வாறிருப்பினும், அடுத்து வரும் நாட்களில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் காலப் பகுதி என்றாலும், பெருந்தோட்ட தொழிலாளர்களது வேதன அதிகரிப்பு விடயம் கொள்கை ரீதியான தீர்மானம் என்பதால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க போவதில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)

## கொரோனா வைரஸை தடுக்க உலக வங்கி நிதி உதவி

(கொழும்பு)

**கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க உலக வங்கி தீர்மானித்துள்ளது. குறித்த உதவித் தொகையின் பெரும்பாலான பகுதி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.**

**வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகளை பெறுவதற்கு இந்தப் பணம் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, குறித்த வைரஸ் தொற்று காரணமாக அமெரிக்காவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளதோடு 122 பேர் குறித்த வைரஸ் பரவலுக்கு உள்ளாகியுள்ளனர்.** (7-9)

## தாவடியில் வாள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இரண்டு வாள்களை மீட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தாவடி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கூரிய ஆயுதங்கள் வைக்கப்பட்டிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் குறித்த வீட்டினை நேற்று அதிகாலை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது வீட்டின் முன் முகப்பு சண்செட் பகுதியில் இருந்து இரண்டு கூரிய வாள்களை மீட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (9)

## 14 கேள்விகளுக்கு இரு வாரங்களில் பதிலளிக்குமாறு விஜயதாஸவிடம் பொதுபலசேனா கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு கலகொட அத்தே ஞானசார தேரரின் பொதுபலசேனா அமைப்பு 14 நாட்களுக்குள் 14 கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு கோரியுள்ளது.

பொதுபலசேனா அமைப்புக்கு நோர்வேயில் இருந்து நிதியுதவி கிடைப்பதாக விஜயதாஸ ராஜபக்ஷ, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்திருந்தார்.

இதனை மறுத்துள்ள பொதுபலசேனா அமைப்பு பௌத்த தீவிரவாதத்தை தாம் ஒருபோதும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நோர்வேயின் உதவியுடன் எந்தக்கால கட்டத்தில் பௌத்த தீவிரவாதம் முன்னெடுக்கப்பட்டது.

நோர்வேயில் எப்போது பொதுபலசேனாவுக்கு நிதியும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன உட்பட்ட 14 கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு பொதுபலசேனா விஜயதாச ராஜபக்ஷவிடம் கேட்டுள்ளது.

இந்த 14 கேள்விகளுக்கும் 14 நாட்களுக்குள் பதில் வழங்குமாறு பொதுபலசேனா வலியுறுத்தியுள்ளது. (7-9)

## தொலைபேசி சின்னத்தில் களமிறங்கும் சஜித் அணி

(கொழும்பு)

சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் பொதுத் தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிடும் என ரஞ்சித் மத்துமபண்டார நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதனிடையே ஐக்கிய தேசியக்கட்சி யானை சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதுடன் உடனடியாக வேட்புமனு பட்டியலை தயாரிக்குமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் சின்னம் சம்பந்தமாக ரணில் மற்றும் சஜித் அணிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தீர்ப்பதற்காக மங்கள சமரவீர மற்றும் மலிக் சமரவிக்ரம ஆகியோர் நேற்று முன்தினம் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரை தனித்தனியாக சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

எனினும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியவில்லை. இதனிடையே இந்த கருத்து முரண்பாட்டு நிலைமையை தீர்ப்பதற்கான நடு நிலையாளராக ரணில் விக்கிரமசிங்க, ராஜித சேனாரட்னவை நியமித்துள்ளார்.

இதனடிப்படையில் அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இரண்டாம் கட்டமாக நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பிரதிநிதிகளை சந்தித்துள்ளார். (7-9)

## நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு 2 மாதகால தலைமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளை தொழிலில் அமர்த்தும் செயற்றிட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பட்டதாரிகள் 45,585 பேருக்கான நியமனக் கடிதங்கள் செயலாளர் , அரச பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

நியமனங்களை பெற்றுக் கொள்ளும் பட்டதாரிகள் தமது பிரதேச செயலாளரிடம் நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டதாக அறிக்கையிடுவதுடன், பிரதேச செயலாளரினால் தமது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவை நிலையம் அல்லது நகர கஷ்டப் பிரதேச நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

நியமனம் பெறும் பட்டதாரிகள் ஒரு வருடகால பயிற்சிக்குட்படுத்தப்படுவதுடன், முதல் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் இரண்டு மாதகால தலைமைத்துவ பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும்.

இரண்டாம் குழுவினர் குறித்த சேவை நிலையத்தில் தமது கடமை தொடர்பாகவும் சேவை நிலையம் தொடர்பாகவும் இரண்டு மாதகாலம் ஆய்வு செய்து அந்நிலையத்தை முன்னேற்றுவதற்கான செயற்றிட்ட அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டும்.

முதல் குழுவின் தலைமைத்துவப் பயிற்சி நிறைவடைந்த பின்னர் அவர்கள் தமது சேவை நிலையத்திற்கு இணைக்கப்படுவதுடன், இரண்டு மாதகாலம் சேவை நிலையம் மற்றும் வழங்கப்பட்ட கடமைகள் தொடர்பாக ஆய்வு செய்து செயற்றிட்ட அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டும்.

செயற்றிட்ட அறிக்கையை நிறைவு செய்த இரண்டாம் குழுவினர் இரண்டு மாதகால தலைமைத்துவ பயிற்சியினை பெறுவதோடு, இவ் இரண்டு குழுக்களும் பின்னர் குறித்த சேவையில் தொழில் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவர். 2021 மார்ச் முதலாம் திகதி தொடக்கம் அனைத்து பயிலுநர்களுக்கும் குறித்த சேவை நிலையத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

நியமனம் பெறும் அனைத்து பட்டதாரி பயிலுநர்களும் தமது சேவை நிலையத்திற்கு அருகில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி அல்லது கிராமிய அபிவிருத்தி வங்கி கிளையொன்றில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டியதுடன், அதுபற்றிய விபரத்தை பிரதேச செயலாளருக்கு வழங்க வேண்டும்.

அதனடிப்படையில் பயிற்சிக்காலத்தில் மாதாந்தம் ரூபா 20,000 கொடுப்பனவு அக்கணக்கில் வரவு வைக்கப்படும். பயிற்சி காலத்தின் முதல் இரண்டு மாதத்திற்குள் தயாரிக்கப்படும் செயற்றிட்ட அறிக்கைக்கேற்ப கிராமிய மற்றும் குறைந்த வசதியுடைய குறித்த சேவை நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக முன்வைக்கப்படும் ஆலோசனைகள் தொடர்பாக 2020 வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதனால், அனைத்து பயலுநர்களும் சேவை நிலையத்தில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் அண்மித்த பிரதேச மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து தமது சேவை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (7-9)

## ரணிலை கைது செய்யுங்கள்

### வாசுதேவ கோரிக்கை




(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ய வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7-9)

# யாழ் மத்திய கல்லூரி எதிர் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி

## மோதும் வடக்கின் 114 வது பெரும் போர் இன்று ஆரம்பமாகிறது



வட மாகாணத்தின் முன்னணி பாடசாலைகளான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையில் இடம்பெறும் நூற்றாண்டு தாண்டிய வரலாற்றினைக் கொண்டுள்ள "வடக்கின் பெரும் சமர்" என வர்ணிக்கப்படும் பெரும் கிரிக்கெட் தொடரில், 114ஆவது மோதல் இன்று, நாளை, நாளை மறுதினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கின் பெரும் சமரில் இம்முறை யாழ் மத்திய கல்லூரி அணியினை இலங்கை இளையோர் தேசிய அணியினை பிரிதிநிதித்துவம் செய்தவரும், மூன்றாவது வருடமாக பெரும் சமரில் களம் காண்பவருமான விஜயகாந்த் வியாஸ்கந்த் தலைமை தாங்குகின்றார். இவருக்கு துணையாக அணியின் நட்சத்திர சகலதுறை வீரரான கமலராசா இயலரசன் செயற்படுகின்றார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி அணியினை, ஐந்தாவது வருட வீரராக இம்முறை ஆடவுள்ள நாகேந்திரராஜா சௌமியன் தலைமை தாங்குகின்றார். அணியின் உப தலைவராக, கடந்த வருட பெரும் சமரின் நாயகனான தெய்வேந்திரம் டினோஷன் செயற்பட்டு வருகின்றார்.

கடந்த வருடம் பெரும் சமரானது விறு விறுப்பிற்கு பஞ்சமில்லாது இரு அணிகளின் கைகளிற்கும் போட்டி மாறி மாறி நகர்ந்து கொண்டிருந்தது. இறுதியில் சமநிலையில் போட்டி நிறைவிற்கு வர 2018 ஆம் ஆண்டில் தசோபனது தலைமையில் ஏழு வருடங்களின் பின்னர் கிண்ணத்தினை மீட்ட மத்திய கல்லூரியினர், கிண்ணத்தினை தக்க வைத்தனர். சென் ஜோன்ஸ் அணியினர் 2017 ஆம் ஆண்டில் ஜெனி பிளெமிங்கின் தலைமையில் இறுதியாக வெறியொன்றினை பதிவு செய்துள்ளனர்.

இலங்கையின் பழமையான கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் சமர்களில் ஒன்றான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் போட்டியிடும் "வடக்கின் பெரும் சமர்" போட்டியானது, 1904ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை இடம்பெற்றுள்ள 113 சமர்களில் 36 போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும், 28 போட்டிகளில் மத்திய கல்லூரியும் வெற்றிபெற்றுள்ளன. 41 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துள்ளன. ஒரு போட்டி (1967) கைவிடப்பட்ட அதேவேளை, 7 போட்டிகளின் (1905, 1911-1914, 1925, 1927) முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை.

# தல என்று அழைக்கும் போது

## ரசிகர்களின் அன்பு வெளிப்படுகிறது

### டோனி உருக்கம்


என்னை தல என்று அழைக்கும்போது அவர்கள் என் மீது வைத்திருக்கும் அன்பு பிரதிபலிக்கிறது என்று மகேந்திர சிங் தோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நிறைவடைந்த உலகக் கோப்பை கிரிக்கெட் தொடருக்கு பின்னர் சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணியில் பங்கேற்காமல் இருந்து வருகிறார் இந்தியாவின் முன்னாள் கேப்டன் தோனி.

வரும் 29-ம் தேதி தொடங்க உள்ள ஐபிஎல் டி 20 தொடரின் 13-வது சீசனுக்கு தயாராகும் விதமாக சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் பயிற்சியை தொடங்கினார் 38 வயதான தோனி.

இந்த நிலையில் சிஎஸ்கே அணியுடனான தனது உறவு குறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றில் தோனி பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

அதில் தோனி கூறியதாவது, " சிஎஸ்கே அணி என்னை எல்லாவற்றிலும் மேம்பட உதவியது. அது தனி மனிதனாக இருந்தாலும் சரி... கிரிக்கெட் வீரராக இருந்தாலும் சரி. சூழ் நிலைகளை கையாளுவது களத்திலும் சரி, வெளியிலும் சரி கடினமானதுதான். சிஎஸ்கே ரசிகர்கள் என்னை தல என்று அழைப்பதை சிறப்பாக உணர்கிறேன். தல என்றால் சகோதரன் என்று



பொருள். அவர்கள் அவ்வாறு அழைக்கும்போது என் மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பு பிரதிபலிக்கிறது.

நான் சென்னையில் இருக்கும்போது சரி, தென் இந்தியாவில் இருக்கும்போது சரி அவர்கள் என் பெயரை சொல்லி அழைப்பதில்லை. தல என்றுதான் அழைக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

### பெண்கள் ரி20 உலகக்கிண்ணம்

# இந்தியாவை இன்று சந்திக்கிறது இங்கிலாந்து

மகளிர் டி 20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் அரை இறுதி சுற்றில் இந்திய அணி, இங்கிலாந்துடன் இன்றுமோதுகிறது.



மகளிர் டி 20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் 'பி பிரிவில் நேற்று முன் தினம் தென் ஆபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையே நடைபெற இருந்த ஆட்டம் மழை காரணமாக ஒருபந்துகூட வீசப்படாமல் ரத்து செய்யப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இதனால் லீக் சுற்றில் தனது பிரிவில் 7 புள்ளிகளுடன் தென் ஆபிரிக்க அணி முதலிடம் பிடித்தது. இதே பிரிவில் இங்கிலாந்து அணி 6 புள்ளிகளுடன் 2-வது இடம் பிடித்துள்ளது. இதன் மூலம் இரு அணிகளும் அரை இறுதி சுற்றுக்கு முன்னேறின.

சிட்னி நகரில் இன்று நடைபெறும் முதல் அரை இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணியானத்து இந்தியாவுடன் மோதுகிறது. 2-வது அரை இறுதி ஆட்டத்தில் தென் ஆபிரிக்கா, 4 முறை சம்பியனான ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இந்திய அணி லீக் சுற்றில் 4 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று முதல் அணியாக அரை இறுதிக்கு தகுதி பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் இங்கிலாந்து அணி லீக் சுற்றில் 3 வெற்றி, ஒரு தோல்வியை பதிவு செய்தது.

கடந்த 2018-ம் ஆண்டு நடைபெற்ற டி 20 உலகக் கோப்பை தொடரிலும் இந்தியா, இங்கிலாந்து அணியுடன் மோதியிருந்தது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது. ஆனால் அந்த அணி இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் வீழ்ந்து கோப்பை வெல்லும் வாய்ப்பை இழந்திருந்தது.

# பங்களாதேஸ் நிர்ணயித்த இலக்கை நூலிழையில் தவறவிட்ட சிம்பாவே

வங்காளதேச அணிக்கெதிராக 323 ரன் இலக்கை விரட்டிய ஜிம்பாப்வே 318 ரன் சேர்த்து நான்கு ரன்னில் வெற்றியை நழுவ விட்டது.

வங்காளதேசம் - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 2-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ்வென்ற வங்காளதேசம் பேட்டிங்கை தேர்வு செய்தது. தொடக்க வீரர் தமிம் இக்பால் 158 ரன்கள் விளாச வங்காளதேசம் 8 விக்கெட் இழப்பிற்கு 322 ரன்கள் குவித்தது. முஷ்பிகுர் ரஹிம் 55 ரன்களும், மெஹ்முதுல்லா 41 ரன்களும், முகமது மிதுன் ஆட்டமிழக்காமல் 32 ரன்களும் சேர்த்தனர்.

பின்னர் 323 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஜிம்பாப்வே அணி களம் இறங்கியது. ஜிம்பாப்வே அணி ஒரு கட்டத்தில் 41 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 213 ரன்கள் எடுத்திருந்தது. கடைசி 54 பந்தில் 110 ரன்கள் தேவைப்பட்டது. திரிபானோ அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த ஜிம்பாப்வேயின் ரன் விகிதம் ஜெட் வேகத்தில் உயர்ந்தது.

இதனால் வங்காளதேசம் வெற்றி பெறும் நிலை ஏற்பட்டது. கடைசி இரண்டு ஓவரில் 34 ரன்கள் தேவைப்பட்டது. ஷியுல் வீசிய 49-வது ஓவரில் முட்டோம்போட்சி இரண்டு பவுண்டரிகள் அடிக்க 14 ரன்கள் சேர்த்தது ஜிம்பாப்வே.

இதனால் கடைசி ஓவரில் 20 ரன்கள் தேவைப்பட்டது. அலி-அமின் ஹொசைன் கடைசி ஓவரை வீசினார். முதல் பந்தில் திரிபானோ ஒரு ரன் அடித்தார். 2-வது பந்தில் வைடு மூலம் ஒரு ரன் கிடைத்தது. அதற்குப்பதிலாக வீசப்பட்ட பந்தில் முட்டோம்போட்சி ஆட்டமிழந்தார். அவர் 21 பந்தில் ஐந்து பவுண்டரியுடன் 34 ரன்கள் சேர்த்தார்.

கடைசி நான்கு பந்தில் 18 ரன்கள் தேவைப்பட்டது. 3-வது மற்றும் 4-வது பந்தை இமாலய சிக்சருக்கு தூக்கினார் திரிபானோ. இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கடைசி இரண்டு பந்தில் 6 ரன்களே தேவைப்பட்டது. ஆனால் ஐந்தாவது பந்தில் திரிபானோ ரன் அடிக்கவில்லை. கடைசி பந்தில் ஒரு ரன்னே அடித்தார் திரிபானே. இதனால் ஜிம்பாப்வே நான்கு ரன் வித்தியாசத்தில் வெற்றியை நழுவவிட்டது. திரிபானே 28 பந்தில் 2 பவுண்டரி, ஐந்து சிக்சருடன் 55 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த வெற்றியின் மூலம் வங்காளதேசம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2-0 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

# ஐ.பி.எல் போட்டியில் வெற்றி பெறும்

## அணிகளின் பரிசுத்தொகை பாதியாக குறைப்பு

ஐபிஎல் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கான பரிசுத்தொகையை பாதியாக குறைத்துள்ளதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

13-வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் திருவிழா வரும் 29-ந்தேதி தொடங்குகிறது. வான்கடே மைதானத்தில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணி, முன்னாள் சாம்பியன் சென்னை சூப்பர் கிங்சுடன் மோதுகிறது.

8 அணிகளுக்கு இடையான போட்டியில் தரவரிசையில் முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும். இதையடுத்து ஐ.பி.எல். போட்டிகளின் இறுதி ஆட்டம் மே மாதம் 24-ம் தேதி நடைபெற உள்ளது.

கடந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற அணிக்கு ரூ.20 கோடியும், இரண்டாவது இடம் பிடித்த அணிக்கு ரூ. 12.5 கோடியும், 3-வது மற்றும் 4-வது இடம் பிடித்த அணிகளுக்கு தலா ரூ.8.75 கோடியும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான (2020) ஐ.பி.எல். பரிசுத்தொகையில் பிசிசிஐ அதிரடி மாற்றம் கொண்டுவந்துள்ளது. அதன்படி சாம்பியன் பட்டம் பெறும் அணி உள்பட தரவரிசையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.

பிசிசிஐ அறிவித்துள்ள புதிய பரிசுத்தொகை விவரத்தின்படி 2020-ம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் சாம்பியன் பட்டம் பெறும் அணிக்கு 10 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும். இரண்டாவது இடம் பிடிக்கும் அணிக்கு 6.25 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்பட உள்ளது.

அதேபோல் 3-வது மற்றும் 4-வது இடங்களை பிடிக்கும் அணிகளுக்கு தலா 4.375 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்பட உள்ளது. மேலும், ஐ.பி.எல். போட்டிகளை நடத்தும் ஒவ்வொரு மாநில கிரிக்கெட் சங்கங்களுக்கும் தலா ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட உள்ளதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

## ஐ.நா.தீர்மானம் தொடர்பில்

# சுமந்திரனை பகிரங்க விவாதத்திற்கு அழைக்கும் முன்னாள் சட்டத்தரணி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் கொள்கைகளை விற்று தரகு அரசியல் நடத்திவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் முடிந்தால் ஐ.நா.தீர்மானம் தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி த.காண்டீபன் பகிரங்க சவால் விடுத்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக் கட்சி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பில் பல்வேறு மட்டங்களில் இருந்தும் கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் காலத்துக்குக் காலம் ஐ.நா.தீர்மானம் தொடர்பில் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்.

போர்க்குற்ற விசாரணை முடிந்துவிட்டது எனக்கூறிய அவர் தற்போது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தைப் பற்றிப் பேசவும் ஆரம்பித்துவிட்டார்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டது இனவழிப்பே என அன்று தொடக்கம் இன்றுவரை கூறிவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மக்களைக் காட்டிக் கொடுத்து அரசியல் செய்ததில்லை.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் காங்கிரஸ் பிரிந்தமைக்கு ஆசன ஒதுக்கீடே காரணம் எனக் கூறும் சுமந்திரன் அக்காலகட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் கொள்கைகளை கைவிட்டு தென்னிலங்கையுடன் சோரம் போகத் தயாரானதன் விளைவே நாம் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஐ.நா.தீர்மானம் என மேடைகளில் அட்டைப் படத்தை மட்டும் காட்டி மக்களை ஏமாற்றும் சுமந்திரன் முடிந்தால் ஐ.நா.தீர்மானம் தொடர்பில் நேரடி விவாதத்திற்கு வரட்டும். அப்போது மக்களுக்கு உண்மை தெரியவரும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-10)

## குவைத் செல்லவுள்ள பயணிகளுக்கு முக்கிய அறிவித்தல்

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளில் இருந்து குவைத் நாட்டிற்கு செல்லும் பயணிகளிடம் இருந்து புதிய கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட வைத்திய சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு மேலதிகமாக இந்தியா, பங்களாதேஷ், பிலிபைன்ஸ், எகிப்து, சிரியா, லெபனான், துருக்கி, அஜர்பைஜான் மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகள் மீது விதிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவு எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதாக குவைத் சிவில் விமான சேவை அதிகார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறிப்பிட்டுள்ளது. அதன்படி, குவைத் நாட்டிற்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ளவர்கள் அந்தந்த நாடுகளில் அமைந்துள்ள தூதரகங்களின் அனுமதியைப் பெற்றுள்ள வைத்திய நிலையம் ஒன்றில் தான் கொரோனா தொற்றாளர் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அந்த சான்றிதழ் இல்லாமல் குவைத் நோக்கி சென்றால் குறித்த விமானத்திலேயே அவரை நாடுகடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த உத்தரவை மீறும் விமான சேவை நிறுவனங்கள் மீதும் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குவைத் சிவில் விமான சேவை அதிகார சபை சுட்டிக்காட்டியது. (ஜ-2)

## உலக மகளிர் தினம்

(கொழும்பு)

தென்மராட்சி வனப்புறு வனிதையர் நடத்தும் உலக மகளிர் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சாவகச்சேரி சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி பவுலினா சுபோதினி தயாளராசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் வரவேற்புரையினையும் சட்டத்தரணி கே.சயந்தன் தொடக்கவுரையினையும் நிகழ்த்துவர். (ஜ-114)

# மகனுக்கு கொரோனா தொற்று தந்தை,தாயும் வைத்தியசாலையில்

(கொழும்பு)

கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தின் பேரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பதுளை அரசினர் வைத்தியசாலையின் விசேட சிகிச்சைப் பிரிவில் தனித்தனியாக அனுமதிக்கப்பட்டனர்.

தாய், தந்தை மற்றும் அவர்களது ஏழு வயது மகன் ஆகிய மூவரும் மேற்படி சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு விசேட சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவர்களில் ஏழு வயது நிரம்பிய சிறுவனுக்கு கொரோனா நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டதும் பெற்றோர் அவரை பதுளை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். இதையடுத்து அச்சிறுவனின் தாயும் தந்தையும் விசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் குறித்த மூவரும் தனித்தனியாக விசேட சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் அவர்கள் மூவரும் தென்கொரியாவில் வசித்து வந்த இலங்கையர்களாவர். தென்கொரியாவில் கொரோனா நோய் பரவுவதை அடுத்து குறித்த மூவரும் அச்சம் கொண்டு தமது சொந்த நாடான இலங்கையின் பண்டாரவளைப் பகுதியில் அம்பிட்டிய என்ற கிராமத்திற்கு கடந்த 27 ஆம் திகதி வருகை தந்துள்ளனர்.

அவர்கள் வந்து சேர்ந்த ஒரு வாரத்தில் சிறுவனுக்கு கொரோனா நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டன. இதையடுத்தே இம் மூவரும்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ-2)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.02.2020 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
அமரர். நவரட்ணம் இராசம்மா
(அச்சாக்கா) அவர்களின்
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 05.03.2020
வியாழக்கிழமை இன்று காலை 10.30 மணியளவில்
அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம்
தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம்:- 07.06.1935
மறைவு:- 04.02.2020

மகன்,
கோப்பாய் வடக்கு சரவணைந்தா வித்தியாலய வீதி. (C-9406)


## கொரோனா அச்சம்

# 54 ஆயிரம் சிறைக்கைதிகள் தற்காலிகமாக விடுதலை

(டெஹ்ரான்)

ஈரானில் 54 ஆயிரம் சிறைக்கைதிகள் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டனர்.

சிறைக்கைதி ஒருவர் கொரோனா வைரஸின் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளமை மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

இந்நிலையிலேயே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக நீதித்துறை ஊடகப் பேச்சாளர் குலாம் ஹுசைன் இஸ்மாயில் தெரிவித்தார்.

எனினும், ஐந்து வருடங்களுக்கு மேலதிகமாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் விடுவிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸின் தாக்கம் காரணமாக, ஈரானில் இதுவரை 77 பேர் உயிரிழந்துள்ளதோடு, இரண்டாயிரத்து 336 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 435 பேர் முழுமையாக குணமடைந்துள்ளனர். இதேவேளை, கொரோனா வைரஸ் காரணமாக சர்வதேச ரீதியில் இதுவரை மூவாயிரத்து 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், 92 ஆயிரத்து 862 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். - (ஜ-2)

# மாமனிதர் கிட்டிணன் சிவநேசனின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல்

(குப்பிழான்)

மாமனிதர் கிட்டிணன் சிவநேசனின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் கரவெட்டி மாலுசந்தியில் அமைந்துள்ள கரவெட்டிப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஜ-18)

## "உடலும் உள்ளமும் நலந்தானா" திரை இசைப்பாடல்,மருத்துவ நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
உடுவில் றோஸ் விலா பாரம்பரிய வீடுகளின் ஏற்பாட்டில் வைத்திய கலாநிதி வரதுணன் மகாதேவன் வழங்கும் "உடலும் உள்ளமும் நலந்தானா?" திரை இசைப்பாடல் மற்றும் மருத்துவ நிகழ்வு இன்று 5 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் இல.25, உடுவில் தேவாலய வீதியிலுள்ள றோஸ் விலா வெளியரங்கில் இடம்பெறும்.(ஜ-2)

## தையல் பயிற்சி நிலையம் திறப்பு

(கொடிகாமம்)
நம்பிக்கையொழி ஜேர்மன் நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சியில் தையல் பயிற்சி நிலைய திறப்பு விழா நாளை 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஏ9 வீதியில் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.
கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் எஸ்.சுபச்செல்வன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன், கொடிகாமம் மத்தி கிராம உத்தியோகத்தர் அறிஞன், சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி விஜயந்தி மனோகரன், கொடி காமம் தெ.கி.ப.நோ. கூ.சங்க தலைவர் இ.அ.ஆனந்தராசா, கொடிகாமம் மத்தி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பிரிந்தன், கொடிகாமம் மத்தி சமுர்த்தி உத்தியோகத்தர் செ. கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஜ-114)

## மகளிர்தின விழா

(யாழ்ப்பாணம்)
மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் "சர்வதேச மகளிர் தின விழா" எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை செயலாளர் ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்வார். (ஜ-2)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)
கல்லாரை, மல்லாகம் பிள்ளையார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறவுள்ளது.(ஜ

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
வைத்திய கலாநிதி அமரர் என்.சிவராஜாவின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் (அறொட்) நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியள வில் இடம்பெறும். (ஜ-2)

## வடக்கு அத்தியாயத்தின் தொடக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு அத்தியாயம்-பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் சங்கம் (AAUP) இலங்கையின் வடக்கை உள்ளடக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் அதன் புதிய அத்தியாயத்தை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளது.
வடக்கு அத்தியாயத்தின் தொடக்கக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட பார்வையாளர் அரங்கில் நடைபெறவுள்ளது. (ஜ-2)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## திருநீற்று மகிமை

### திருநீறு அணியும் முறை

1.உடலில் ஆடையில்லாமலோ, ஈர உடையுடனோ திருநீறு பூசக்கூடாது.
2.கண்ணாடியில் பார்த்துக் கொண்டு திருநீற்றை நெற்றியில் பூசக்கூடாது.
3.ஆள்காட்டி விரலால் திருநீறு பூசக்கூடாது.
4.பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும்,வேடிக்கை பார்த்துக் கொண்டும் திருநீறு பூசக்கூடாது.
5.திருநீறு கொடுப்பவர்களும் பேசிக் கொண்டு ஒருவருக்கு திருநீறு கொடுக்கக் கூடாது. திருநீற்றைத் தரையில் சிந்தக் கூடாது.திருநீற்றைக் காலால் மிதிக்கக் கூடாது.
6.கோயிலில் திருநீறு வாங்கும் போது கையை மட்டும் நீட்டி வாங்கக்கூடாது.
7.வாங்கிய திருநீற்றை இடதுகையில் கொட்டி அதிலிருந்து மறுபடியும் எடுத்துத் தரிக்கக் கூடாது. வலது கையில் பெற்றுக்கொண்ட திருநீற்றை அப்படியே நெற்றியில் பூசிக்கொள்ள வேண்டும். அல்லது ஒரு சிறு காகிதத்தில் திருநீறை இட்டு அதிலிருந்து எடுத்துப் பூசிக் கொள்ள வேண்டும்.
8.நம்மை விட வயதில் சிறியவர்களின் கையில் இருந்து திருநீற்றை எடுத்து பூசிக்கொள்ளக்கூடாது. திருநீறை நம் கையில் வாங்கி, அதிலிருந்து தான் எடுத்துப் பூசிக்கொள்ள வேண்டும்.
9.திருநீற்றை ஒருவருக்குத் தரும் போது, நாம் பூசிக் கொள்ளும் போது "ஓம் சிவாய நம" என்ற மஹா மந்திரத்தை பக்தியுடன் சொல்ல வேண்டும்.
10. சிவதீட்சை பெற்றவர்கள் மட்டுமே திருநீற்றை நீரில் குழைத்து பூசிக்கொள்ள வேண்டும். சிவதீட்சை பெறாதவர்கள் நீரில் குழைக்காமல் அப்படியே உதிரியாகப் பூசிக்கொள்ள வேண்டும்.
11.திருநீறு பூசும் பொழுது வடக்கு அல்லது கிழக்குத் திசை நோக்கி நின்று கொண்டு பூசவேண்டும்.
12.நடந்து கொண்டும் படுத்துக் கொண்டும் திருநீறு பூசக்கூடாது.

### திருநீறு அணிய வேண்டிய காலங்கள்

1.சந்தியாக்காலங்களில்
2.சூரிய உதய அஸ்தமன காலங்களில்
3.நீராடியவுடன்
4.பற்களை சுத்தம் செய்தவுடன்
5.உணவு உண்பதற்கு முன்னும் பின்னும்
6. பூஜை செய்வதற்கு முன்னும் பின்னும்
7.உறங்குவதற்கு முன்னும் பின்னும்
8.மலசலம் கழித்த பின்பு
9.சிவதீட்சை பெறாதவரைத் தீண்ட நேர்ந்தால் அச்சமயத்தில்
10.பூனை, கொக்கு, எலி போன்ற பிராணிகளைத் தீண்ட நேர்ந்தால் உடனே திருநீறு அணிய வேண்டும்.

### திருநீற்றின் மஹிமை

1. திருநீற்றுப் பதிகம் பாடி திருநீறு பூசி மதுரை கூன்பாண்டியனின் வெப்பு நோயை நீக்கினார் திருஞானசம்பந்தர்.
2. திலகவதியார் தன் தம்பி திருநாவுக்கரசருக்கு திருநீற்றை திருவைந்தெழுத்தால் ஓதிக்கொடுத்தார். துடிதுடிக்க வைத்துக் கொண்டிருந்த வயிற்று வலி நீங்கியது.
3.நெற்றி நிறைய திருநீறு பூசி நித்தமும் நியமத்துடன் சிவ பூஜை செய்து யமனை வென்றார் மார்க்கண்டேயர்.

### திருநீறு அணிவதால் உண்டாகும் நன்மைகள்

1.உடல் நாற்றத்தைப் போக்கும்
2.நோய்க்கிருமிகளைக் கொல்லும்.
3.உடலைச் சுத்தம் செய்யும்
4.வியாதிகளைப் போக்கும்
5.தீட்டைக் கழிக்கும்
6.ஏவல்,பில்லி,சூனியம் இவைகளிலிருந்து பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கும்.
7.முகத்திற்கு அழகைத் தரும்
8.ஞாபக சக்தியைப் பெருக்கும்
9.ஞானத்தை உண்டாக்கும்
10.புத்திக் கூர்மையைத் தரும்
11.பாவத்தைப் போக்கும்
12.பரகதியைத் தரும்

## இராசி பலன்

**மீனம்** உறவினர் வழியில் எதிர் பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு.

**மேடம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காண்பீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**இடபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கும்பம்** பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, ரோக பயமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | சந். ராகு |
| சூரி | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை | | |
| புத | | | |
| சனி,செவ் கேது.குரு | | | |

**05.03.2020**
மாசி 22, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
தசமி முற்பகல் 8.45 மணிவரை
திருவாதிரை முற்பகல் 7.12 மணிவரை
சுபநேரம் 7.55-9.25 மணிவரை
இராகுகாலம் 1.55-3.25 மணிவரை
சுபமுகூர்த்த தினம்
கடன் வாங்கவும் செய்யாதே
கொடுக்கவும் செய்யாதே
வளவன்

**கடகம்** விலை உயர்ந்த பொருட்களை கவனமாகக் கையாள்வது நல்லது, அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடுத்து உதவ முன் வரலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சிறப்பான நாள், உன்னதமான வாழ்விற்கு அடித்தளம் அமைப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,போசன சுகமுண்டு.

**தனுசு** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** வரவும், செலவும் சமமாகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எதையும் யோசித்துச் செய்வதன் மூலம் யோகங்கள் வந்து சேரலாம், பிரயாண பயமுண்டு.

**துலாம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

## சைவ வாலிப சங்கத்தின் நூற்றாண்டு விழா மலருக்கான தகவல்கள் கோரல்

சங்கத்தின் நூற்றாண்டுப் பூர்த்தியைச் சிறப்பிக்கும் வகையில் வெளியீடு செய்யப்படவுள்ள மலருக்குரிய தகவல்களைத் திரட்டுகின்ற பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கடந்த காலத்தின் பொக்கிசமாகவும், எதிர்கால சந்ததியினருக்குரிய ஆவணமாகவும் இந்த நூலினை ஆக்க வேண்டும் என்ற பேரவாவோடு ஆரம்பித்துள்ள இக் கைங்கரியத்தினை செவ்வனே பூரணப்படுத்துவதற்கு சைவ வாலிப சங்கம் தொடர்பான தகவல்கள், ஆவணங்கள் குறித்த விபரங்கள் தாங்களிற்குத் தெரிந்து இருக்குமாயின் அவை குறித்து எமக்கு அறியத்தருமாறும், தங்களிடம், அல்லது தாங்கள் அறிந்த பொதுமக்களிடம் சங்கம் குறித்த ஆவணங்கள் இருக்குமாயின் அவற்றின் பிரதிகளை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னதாக பெற்று தந்து உதவுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(2478)

**தகவல்களை வழங்கி வைப்பதற்க்கு உரியவர் விபரம்.**
**திரு.வ.நல்லதம்பி - அருணோதயா கல்லூரி வீதி அளவெட்டி-077 957 9046**

**நூற்றாண்டு விழா மலர்க்கு சைவ வாலிப சங்கம்-அளவெட்டி**

## இரண்டாம் மொழி கற்கைநெறி மாணவர்களுக்கான ஒரு விசேட அறிவித்தல்

இரண்டாம் மொழியான சிங்கள மொழி கற்கைநெறி 600 மணித்தியாலம் 6 மாதங்களுக்கானவை.
சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கற்க விரும்புவோருக்கும் ஏற்கனவே விண்ணப்பித்தோருக்கும் 14.03.2020 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிறது. இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் தொடர்ந்து விண்ணப்பிக்கலாம்.
மற்றும் வார நாட்களில் கற்கை நெறியில் கற்க விண்ணப்பித்தோருக்கு எதிர்வரும் புதன் கிழமை (12.03.2020) காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருப்பதாலும் அனைத்து மாணவர்களும் சமுகம் அளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**கற்கைநெறி ஆரம்பிக்கும் இடம்**
**உயர் கலைக்கல்லூரி (காமராஜர் பல்கலைக்கழகம்)**
**ஆரியகுளம், யாழ்ப்பாணம்.**

மேலதிக தகவல்களுக்கு - தலைமைக் காரியாலயம்,
இந்து பௌத்த கலாசார பேரவை
சங்கானை வீதி, அச்சுவேலி.
077 271 1181, 076 608 7223

தகவல்:
பொதுச் செயலாளர்,
இந்து பௌத்த கலாசார பேரவை.

(C-9405)

# சப்ரகமுவ மாகாணப் பாடசாலைகளில் 352 பேருக்கு ஆசிரிய நியமனங்கள்



(அநுராதபுரம்)

சப்ரகமுவ மாகாணத்தில் புதிதாக 352 ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கடந்த 2019.03.31 ஆம் திகதி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தி பெற்ற பட்டதாரிகளைத் தெரிவு செய்து அவர்களுக்குக் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்ட 352 பேருக்கே நேற்று முன்தினம் நியமனங்கள் வழங்கப்பட்டதாக மாகாண சபை ஊடகப் பிரிவு தெரிவித்தது. (ஜ-2)

## மணமகள் தேவை

பட்டதாரி ஆங்கில ஆசிரியருக்கு
தகைமை Bcom, B.A.English, CIMA Manegmement
11 இல் சூரியன் செவ்வாய் அச்சுவினி
2 ஆம் பாதம்
1993.11.26 கி.பாவம்: 11

**தொடர்புகளுக்கு**
**077 623 0977** (2466)

## பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் பகிரங்க ஏல விற்பனை சம்மேளனத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்காக கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் பிளாஸ்ரிக் பெட்டிகள் என்பன உள்ளன. இவற்றினை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் 12.03.2020 (வியாழக்கிழமை) அன்று காலை 10.30 மணிக்கு சம்மேளனத்தில் நடைபெறும் ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
குறிப்பு:- கொள்வனவு செய்யும் பொருட்களுக்கான பணத்தினை உடனே செலுத்தி பொருட்களை பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**தகவல்: தலைவர்**
**யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க**
**சமாசங்களின் சம்மேளனம்(வ-து)**
**இல-100, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி:-021 222 9797, 077 248 9727**

(9407)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>கி.பா: 39 செவ் 7 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Sc. அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10596 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: செவ் 4 இல் உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: B.Sc. ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான பட்டதாரி மணமகன் சைவபோசனம் உடையவர் மட்டும்<br>தொ.இ: G/7353 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த, காசாளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/10598 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: 70 செவ் 8 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: B.Sc. M.Sc, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விரிவுரையாளர், பொறியியலாளர், வைத்தியர் அல்லது அவுஸ்திரேலியா, லண்டன்<br>தொ.இ: G/7355 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 27 ¾ செவ் 12 இல்<br>உயரம்: 164 cm<br>தங்கமை/தொழில்: க.பொ.த.உ.த, சுவிஸ் இல் தனியார் தொழில்.<br>எதிர்பார்ப்பு: படித்த நல்ல குடும்பப் பெண்<br>தொ.இ: B/10599 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 10 செவ் 9 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த<br>எதிர்பார்ப்பு: தொழில் புரிபவர். வெளிநாடு பிரான்ஸ், சுவிஸ், கனடா விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/7365 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா:62 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா. , R.V.G Company இல் பணி புரிகின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10600 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 49 ¼ செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த சமுர்த்தி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/7369 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமதி.சுஜித்தா சுகுணேந்திரன்



எமது பாடசாலையின் சக ஆசிரியர்
திருமதி.சுஜித்தா சுகுணேந்திரன்
ஆசிரியர் அவர்கள் அதிபர் சேவை
தரம் III பரீட்சையில்
சித்தியடைந்து யா/யூனியன்
கல்லூரியில் உதவி அதிபராக
05.03.2020 இன்று கடமைகளைப்
பொறுப்பேற்றுக் கொள்வதையிட்டு
பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்
பல பதவிகள் பெற
வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

(சி-9411)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திருமதி ராகினி பிரசாந்தனன்



எமது பாடசாலையின் சக ஆசிரியர்
திருமதி ராகினி பிரசாந்தனன் அவர்கள்
06.02.2020 ஆம் திகதியன்று
பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு
விழாவில் கல்வி முது மாணிப்
பட்டத்தினைப் (MEd) பெற்றுக்
கொண்டமையையிட்டு பாராட்டி
வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள்
பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

# வாகன விபத்துகளின் போது குழந்தைகளின் பாதுகாப்பிற்கு புதிய இருக்கை அறிமுகம்

(கொழும்பு)

வாகன விபத்துக்களின் போது குழந்தைகளுக்கு உயிர் பாதுகாப்புக்காக உயிர் பாதுகாப்பு வாகன இருக்கையை அறிமுகப் படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டது.

இந்த உயிர் பாதுகாப்பு வாகன இருக்கை தனிப்பட்ட வாகனங்களில் கட்டாயப்படுத்துவதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. கடந்த 7 மாதத்தில் இடம்பெற்ற விபத்துக்களில் ஒரு நாளில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது. எதிர்வரும் காலங்களில் இதனைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-2)

# காயவிடப்பட்டிருந்த வெங்காயத்தை லாவகமாக அள்ளிச்சென்ற நபர்கள்

(கரணவாய்)

விலை அதிகரிப்பின் எதிரொலியாக புரட்டிக் காய விடப்பட்டிருந்த வெங்காயத்தினை வாகனத்தில் வந்தவர்கள் லாபகமாக அள்ளிச் சென்ற சம்பவம் புலோலி, வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்றது.

புலோலி பகுதியைச் சேர்ந்த வெங்காய செய்கையாளர் ஒருவர் தனது வயலில் அறுவடை செய்த வெங்காயத்தினை வயலில் உலரவிட்டு இருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை வாகனத்தில் வந்த நபர்களால் அங்கு காய விடப்பட்டிருந்த ஆறு அந்தர் வரையிலான வெங்காயம் அள்ளிச் செல்லப்பட்டது.

தற்போது வடமராட்சிப் பகுதியில் 12 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் வரை ஒரு அந்தர் வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் அவ் வெங்காய செய்கையாளர் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளார். (ஜ-60)

# சந்தேக நபரைக் கைது செய்தபோது பொலிஸார் மீது கல்வீச்சு

(கரணவாய்)

சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தபோது பொலிஸார் மீது கல் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் வடமராட்சி பகுதியில் இடம்பெற்றது.

கடந்த திங்கட்கிழமை புலோலி காந்தியூர் பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் அங்கு சென்றபோது பொலிஸாருக்கு கஞ்சா விற்க முற்பட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை கையில் விலங்கிடப்பட்டு கொண்டு செல்ல முற்பட்ட போது பொலிஸார் மீது அப்பகுதியை சேர்ந்தவர்கள் சிலர் கற்களை வீசித் தாக்கினர்.

இதைச் சாதகமாகப் பயன்படுத்தி சந்தேக நபர் பொலிஸார் பிடியிலிருந்து கைவிலங்குடன் தப்பியோடினார். தப்பி ஓடிய சந்தேகநபர் பின்னர் பொலிஸாரிடம் சரணடைந்தார். (ஜ-60)

# கையடக்கத் தொலைபேசிகள் தொலைந்தால் முறைப்பாடளிக்க புதிய முறை அறிமுகம்

(கொழும்பு)

பொலிஸ் மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) ஆகியன இணைந்து காணாமல்போன தொலைபேசிகள் குறித்து முறையிடுவதற்கு புதிய முறையொன்றை அறிமுகப்படுத்தின.

இதற்காக www.ineed.police.lk இணையத்தளம் ஒன்றை அறிமுகம் செய்து வைத்துள்ள பொலிஸ் மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழு குறித்த இணையத்தளத்தில் தொலைந்துபோன கையடக்கத் தொலைபேசி தொடர்பான முறைப்பாடுகளை வழங்க முடியுமென வும் தெரிவித்தது.

குறித்த இணையத்தளத்திற்கு செல்வதன் மூலம் குறித்த சேவையைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவுறுத்தப்பட்டதுடன் தொலைந்துபோன தொலைபேசி தொடர்பான விபரங்களை பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கோ சென்று முறையிடத் தேவையில்லையென தெரிவிக்கப்பட்டது. (ஜ-2)

# குருவிக்காடு சமுதாயக் காடாகப் பிரகடனம்

## சாவகச்சேரி பிரதேச சபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

896 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்ட தென்மராட்சி - சரசாலை குருவிக் காட்டு பகுதியை சாவகச்சேரி பிரதேசசபை ஓர் சமுதாயக்காடாக பிரகடனப்படுத்தியுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போது தவிசாளர் க.வாமதேவனால் சபையில் பிரேரிக்கப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் இத்தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது. அப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல நூறு வருடங்களாக குருவிக்காட்டு பிரதேசம் மீன்பிடித்தல், விறகு சேகரிப்பு, கால்நடை வளர்ப்பு போன்ற வாழ்வாதார செயற்பாடுகளுக்கு உட்பட்டு வருகிறது. இப் பகுதியில் மயானம், சவாரித்திடல், வயல் பகுதிகள் என்பனவும் உண்டு. தொண்டமானாறு கடல்நீரேரியுடன் இணைந்து பாரிய ஆளுமையான கண்டல் தாவரங்களைக் கொண்டிருப்பதுடன் உள்ளூர் வதிவிடப் பறவைகள், குடிபெயர் பறவைகள் மற்றும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் பிரதான வாழ்விடமாகவும் விளங்குகிறது. நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிக் காணப்படும் இப்பகுதியை சமுதாயக்காடாக பிரகடனம் செய்வதுடன் பிரதேச செயலகம் மற்றும் உள்ளூர் மட்ட அமைப்புகள் என்பனவற்றுடன் இணைந்து பிரதான உள்ளூராட்சி மன்றமாகிய சாவகச்சேரி பிரதேசசபை உள்ளூர் ஆளுகை பொறிமுறை ஊடாக பாதுகாக்க முடிவெடுத்துள்ளது. அத்துடன் சூழலுக்கு நட்புறவான சுற்றுலாவிற்கும் நீர்வள அபிவிருத்திக்கும் இப்பகுதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது என்ற வகையில் குருவிக்காட்டை முழுமையாகப் பாதுகாக்கும் பொறுப்பினை பிரதேசசபை எடுத்துக் கொள்கிறது என தனது பிரேரணையில் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-30)

# நல்லூர் சங்கிலியன் பூங்காவில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(குப்பிழான்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஒழுங்கமைப்பில் "பெண்களை வலுப்படுத்துவோம்... சமத்துவம் பேணுவோம்" எனும் தொனிப் பொருளிலான சர்வதேச மகளிர் தின நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 10 ஆம் திகதி காலை 9 மணி முதல் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் பிரதம விருந்தினராகவும் நல்லூர் பிரதேச செயலர் திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரபல ஊடகவியலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான திருமதி.உமா சந்திரபிரகாஷ் இந்நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளார். குறித்த நிகழ்வின் ஒரு கட்டமாக வடமாகாண பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை நிகழ்வும் இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஜ-18)

# இந்தியாவிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் பெரிய வெங்காயத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், இதற்கு இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் பெரிய வெங்காயத் தொகையை இறக்குமதி செய்யவுள்ளதாக பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடப் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இரத்ததான முகாம் நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பல்கலைக்கழக மருத்துவ பீட வளாகத்தில் இடம்பெறும். (ஜ-2-18)

# மகளிர் தின விளையாட்டு விழா

(கொடிகாமம்)

கைதடி நாவற்குழி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் சர்வதேச மகளிர் தின விளையாட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி செல்வராஜ் விக்டோரியா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சகிலா மோகன்வசந்தன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம், சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி கிரிஜா வாசுதேவன், தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன், பொதுச் சுகாதார பரிசோதகர் ம.பிரபாகரன், ஜே/287 கிராம உத்தியோகத்தர் த.மாதுங்கன், ஜே/297 சமுர்த்தி உத்தியோகத்தர் இ.நிருபாகரன், ஜே/297 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யுகின் பிரதீபன் சயந்தினி, கௌரவ விருந்தினர்களாக ஜே/311 கிராம உத்தியோகத்தர் திருமதி மதுசன் சோபிகா, சமுர்த்தி உத்தியோகத்தர் றோஜான் சஞ்சீவன், கோப்பாய் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி குமரதீபன் பிரியா ஆகியோர் கலந்து கொள்வர். (ஜ-114)

# தமிழ்த்தேசிய அரசியலில் த.தே.கூவின் வகிபாகம் நிகழ்வு

(கொடிகாமம்)

தமிழ்த்தேசிய அரசியலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வகிபாகம் நிகழ்வு சண்டிலிப்பாய் பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் தி.பிரகாஷ் தலைமையில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் எம்.எம். மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் கற்றறிந்தோர் மொழிதிறன் முட்டறுத்து மொழிவது அறநெறியென மூதுரைக்கவுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் வித்தியாதரன் தென்னிந்திய திருச்சபை வண இ.ராஜ்குமார், தென்மராட்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கவிஞர் லயன் கு.ரஜீவன், தாவடி சாருகாய பட்டப் பொறியியலாளரும் இயக்குநருமான எந்திரி ந.நந்தரூபன், யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் சர்வேஸ்வரா ஆகியோர் கற்றறிந்தோர் மொழியுரையில் உரையாற்றுவர். (ஜ-114)

# நாடாளுமன்ற ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்த சபாநாயகர்



(கொழும்பு)

பொதுத் தேர்தலை முன்னிட்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையினை தொடர்ந்து, சபாநாயகர் கருஜயசூரிய நாடாளுமன்ற ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் விசேட அதிகாரத்துக்கு அமைவாக இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அத்துடன், தற்போது நடைமுறையில் உள்ள காபந்து அமைச்சரவை தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சபாநாயகர் கருஜயசூரிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் தனது உத்தியோகபூர்வ அரச வாகனம் மற்றும் பாதுகாப்பு பிரிவின் கீழுள்ள வாகனங்களையும் நேற்று முன்தினம் ஒப்படைத்தார்.

அத்துடன் கருஜயசூரிய நாடாளுமன்றின் ஒவ்வொரு துறைக்கும் விஜயம் செய்ததுடன், தான் சபாநாயகராக இருந்த காலத்தில் எழுந்த நெருக்கடியான காலத்திலும் நாடாளுமன்ற கடமைகளில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

நாடாளுமன்றம் கலக்கப்பட்டுள்ளமைக்கு அமைவாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# புத்தாக்க தேசியக் கண்காட்சி

(கொழும்பு)

**'INNOTEC 2020'** தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்க தேசிய கண்காட்சி எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை ஹோமாகம பன்னிப்பிட்டியவில் நடைபெறவுள்ளது.

உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சானது கல்வியமைச்சு மற்றும் தொழில்நுட்ப, புத்தாக்க இராஜாங்க அமைச்சுக்களுடன் இணைந்து இத்தேசியக் கண்காட்சியை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தேசிய பாடசாலை, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடம், நெனோ டெக்னொலொஜிக்கான இலங்கை நிறுவனம், வர்த்தக முகாமைத்துவத்துக்கான தேசிய பாடசாலை, அளவையியல் திணைக்களம் ஆகிய ஐந்து வளாகங்களிலும் மேற்படி திகதிகளில் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரையில் இக்கண்காட்சி நடைபெறும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 16 ஆம் திகதி ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பவியல் பீடமொன்றை திறந்து வைக்கவுள்ளார். இதனையொட்டியே இம்மாபெரும் கண்காட்சியை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (ஜ-2)

# சம்பிக்கவின் பயணத்தடை நீக்கம்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையை தற்காலிகமாக நீக்கி, கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சனா டி சில்வா நேற்று உத்தரவிட்டார்.

அதன்படி சம்பிக்க ரணவக்கவுக்கான வெளிநாட்டுப் பயணத் தடை எதிர்வரும் ஏப்ரல் 26 முதல் மே மாதம் 12 ஆம் திகதி வரை நீக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு சந்தீப் என்ற இளைஞன் விபத்துக்குள்ளான விவகாரத்தில் தனது அதிகாரத்தை பயன்படுத்தி சாரதியை மாற்றி, உண்மையை மறைத்து சாட்சியங்களை சோடித்து நீதித்துறைக்கு மோசடி செய்தமை தொடர்பிலான குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பிணையில் செல்ல கடந்த டிசெம்பர் மாத இறுதிப் பகுதியில் கொழும்பு நீதவான் நீதிமன்றம் அனுமதித்தது.

25 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீர பிணைகளிலும் செல்ல கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரஞ்சனா டி சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்ததுடன், அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கொழும்பு வந்த சதிநொடா



(கொழும்பு)

வங்காளம் கடற்படையின் சதிநொடா **(SHADHINOTA)** கப்பல் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படையினால் கடற்படை மரபுகளுக்கேற்ப வரவேற்கப்பட்டது.

அதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் இலங்கைக்கு வந்த இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் முஸ்டபா சிலுர் ரஹிம் கான் **(Captain Mostafa Zillur Rahim Khan)** உட்பட அதிகாரிகள் மேற்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் சுமித் விரசிங்கவை சந்தித்து இருதரப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் நினைவுப் பரிசுப் பரிமாற்றமும் நடைபெற்றது. (ஜ-2)

# மணல் அகழ்வு முரண்பாடு; ஐந்து படகுகளுக்குத் தீவைப்பு



(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இறால்குழி பிரதேசத்திலுள்ள நன்னீர் எனும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு 5 படகுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு படகு காணாமல் போயுள்ளதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நன்னீர் பிரதேசத்தில் மணல் அகழ்வில் ஈடுபடும் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள மணல் அகழ்வு மற்றும் விற்பனை தொடர்பான முரண்பாடே இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாம் என தமது ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து எரியூட்டல் சம்பந்தமாக மணல் அகழும் குழுக்களிடையே மோதல்கள் அதிகரிக்கலாம் என சந்தேகத்தின் அடிப்படையில் திருகோணமலை நகரில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு நன்னீர் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் படகுகள் எரியூட்டப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஜ-2)

# கட்சியின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத ஐ.தே.கட்சித் தலைவர்களுக்கு நாட்டைக் கொடுப்பதா?

## சந்திரசேன சாடல்



(கொழும்பு)

கட்சியின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுக்கு நாட்டின் தலைமைத்துவத்தை பொதுமக்கள் பெற்றுக் கொடுக்க மாட்டார்கள் என அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 5 வருட காலப்பகுதியினுள் நல்லாட்சி அரசாங்கத்தால் நாட்டுக்கு பாரிய தீங்கு விளைவிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# பள்ளிவாசலிலுள்ள புத்தர் சிலையை அகற்ற சிறைச்சாலை ஆணையருக்கு பணிப்பு



(கொழும்பு)

மகர ஜும்மா பள்ளிவாசலில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றுமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மகர சிறைச்சாலை வளாகத்தில் இருக்கும் இப்பள்ளிவாசலில் அப்பிரதேச முஸ்லிம்கள் பல தசாப்த காலமாக ஐவேளைத் தொழுகையிலும் ஜும்மா தொழுகையிலும் ஈடுபட்டு வந்தனர்.

என்றாலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து இப்பள்ளிவாசல் மூடப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் தான் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இப்பள்ளிவாசலை ஓய்வு இடமாகப் பாவிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு இழுக்கு ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கும் நிர்வாகத்துக்கும் சிலரால் இழுக்கு ஏற்படுத்தப்படுவதை கண்டித்து ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பிரதேச மக்களாலும் நேற்று மாபெரும் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.


கடந்த சில வருடங்களாக ஒட்டுசுட்டானில் வசிக்கும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் ஆலயத்துக்கும் ஆலய நிர்வாகத்துக்கும் எதிராக பொய்ப் பிரசாரங்கள், அவதூறுகள் பரப்பப்பட்டு வருவதை கண்டிக்கும் முகமாக இந்தப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

குறித்த குடும்பத்தில் வைத்தியர் ஒருவர் தலைமையில் சிவத்தொண்டர் சபை என்ற அமைப்பை நிறுவி அதன் மூலம் வீண் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு ஆலய நிர்வாகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டு ஆலயத்தின் நற்பெயரையும் பக்தர்களின் நம்பிக்கையையும் சிதைக்கும் வகையில் மேற்படி குடும்பத்தினர் செயற்பட்டு வருவதோடு ஆலயத்தில் ஒலிபெருக்கி பாவிப்பதற்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வழக்குத் தாக்கல் செய்து ஒலிபெருக்கி பாவிப்பதையும் தடை செய்துள்ளதோடு விழாக் காலங்களில் வேண்டும் என்றே தடைகளை மேற்கொண்டும் வருகின்றனர் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் ஆரம்பமான இந்தப் போராட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக வாயில் வரை சென்று அங்கு ஜனாதிபதி, பிரதமர், ஆளுநர் மற்றும் உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வாசிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் பிரேமகாந், பிரதேச சபை உறுப்பினர்கள், நூற்றுக்கணக்கான பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (9-281)

# வீதி திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா விளக்குவைத்தகுளத்தில் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாத வீதி வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்பு செய்த நிலையில் முன்னாள் வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனினால் மக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா தெற்கு.தமிழ் பிரதேச சபையின் உறுப்பினர் கோ.அஞ்சலாவிற்கு ஒதுக்கப்பட்ட சுமார் 10 இலட்சம் நிதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட வீதியையே அவர் திறந்து வைத்திருந்தார். இந்நிகழ்வில் முன்னாள் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோததாரலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உறுப்பினர் கோ.அஞ்சலா உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (9-299)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. "எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும். வெளிநாடு தலையிட்டு எமக்குரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும், உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே, சர்வதேச விசாரணை வேண்டும்" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு கதறி அழுது தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

போர்க்குற்றம் ஒரு சர்வதேச குற்றம். எனவே இது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் அல்லது சர்வதேச தீர்ப்பாயத்தினால் விசாரிக்கப்பட வேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் பேரவை வடகிழக்குக்கு வரவேண்டும். வந்து எங்கள் துயரங்களை நேரில் பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர். (9-299)

# கடும் வரட்சியால் முல்லையில் குடிநீர் நெருக்கடி; பாடசாலை ஆசிரியர்கள்,மாணவர்கள் பெரும் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வரட்சியால் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் நெருக்கடி காரணமாக மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களில் 30 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது. மாணவர்களின் உணவுத் தேவைக்காக பாடசாலைகளில் உள்ள நீர் மூலகங்களில் இருந்து நீரினைப் பெற்று அதனை உணவுத் தேவைக்காக சூடாக்குகின்ற போது உணவு தயாரிக்க முடியாத அளவிற்கு நீரின் மேல் மட்டத்தில் வெள்ளப் படிமானம் ஒன்று உருவாகுவதன் காரணமாக குறித்த நீரினைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

எனவே பாடசாலைக்கு வெளியில் நீரினைப் பெற வேண்டிய நிலையில் பாடசாலையின் நிர்வாகங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் வலயக் கல்விப் பணிமனைகளிலும் நடைபெற்ற கூட்டங்களில் பாடசாலைகளில் நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள் என பாடசாலை அதிபர்களினாலும் பெற்றோர்களினாலும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை.

பாடசாலைகளில் நிலவுகின்ற குடிநீர் நெருக்கடிகளினால் மாணவர்களின் உடல் நலம் பாதிக்கப்படும் என பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (9-350)

# வீட்டின் மீது தாக்குதல் சந்தேகத்தில் 5 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வீடு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி ஆவா குழு என பொறித்துச் சென்ற சந்தேகத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து வாளும் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட விசேட அதிரடிப் படையினர் வாளுடன் நடந்து சென்ற 24, 26 வயதுடைய இரு இளைஞர்களை கைது செய்தனர். அவர்களை வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையையடுத்து மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 9 பேரை தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முன் கடந்த 29 ஆம் திகதி இரவு 8 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், வீட்டின் சுவரில் ஆவா குழு என பொறிக்கப்பட்டு வீட்டுக் கேற்றும் வாளால் குத்தி சேதமாக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டவர்களுக்கும் மேற்படி தாக்குதல் சம்பவத்திற்கும் தொடர்புள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப்பொலிஸ் அதிகாரி பிரனீத் மாணாவடு தலைமையிலான குழுவினர் விரைந்து முன்னெடுத்துள்ள விசாரணைகளின் காரணமாக வேப்பங்குளம் பகுதியில் வாளுடன் நடந்து சென்ற 24 மற்றும் 26 வயதுடைய இருவரும், வாரிக்குட்டியூர் பகுதியில் 20 வயதுடைய ஒருவரும், திருநாவற்குளம் பகுதியில் 20 வயதுடைய ஒருவரும், குருமன்காடு பகுதியில் ஒருவருமென ஐந்து பேரை கைது செய்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதனையடுத்து மேலும் 9 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர். (9-250-299)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்கான முன்னேற்பாட்டு கூட்டம்

(பூநகரி)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான இரண்டாவது முன்னேற்பாட்டு கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பூநகரி பொலிஸ் நிலைய அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பிரதேச சபையினர், சுகாதாரத்துறையினர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)

# வவுனியா வடக்கு பிரதேச செயலாளராக பிரதாபன் நியமனம்



(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக இ.பிரதாபன் நியமிக்கப்பட்டுள்ளதுடன் நேற்று தனது பதவியை பொறுப்பேற்றுள்ளார். வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரான பிரதாபன் முல்லைத்தீவில் உதவி பிரதேச செயலாளராகவும் புதுக்குடியிருப்பில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றிய நிலையில் தற்போது வவுனியா வடக்கிற்கு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (9-299)

# மன்னாகண்டலில் சட்டவிரோத மரக்கடத்தல்

## பொலிஸார் துப்பாக்கிச் சூடு- கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்ப்பட்ட மன்னாகண்டல் காட்டுப்பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்ட கப் வாகனம் ஒன்றினை பொலிஸார் மறித்த வேளை தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதால் கடத்தல்காரர்கள் தப்பியோடிய நிலையில் மரங்கள் வாகனம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மன்னாகண்டல் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான மரக்கடத்தல் இடம்பெற்று வருவதாக நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து காட்டுக்குள் சென்ற பொலிஸார் கப் வாகனம் ஒன்றினை மறித்த வேளை வானம் நிற்பதற்கு சிக்னல் போட்டு விட்டு பொலிஸாரிடம் இருந்து தப்பி செல்ல முற்பட்டுள்ளது.இதன் போது வாகனத்தின் சில்லுக்கு பொலிஸார் துப்பாக்கிசூடு நடத்தியுள்ளார்கள். அப்போது மரக்கடத்தல்காரர்கள் வாகனத்தினை விட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இச்சம்பவத்தினை தொடர்ந்து வாகனத்தினையும் வாகனத்தில் இருந்த மரங்களையும் மீட்டுள்ளதோடு காட்டுப்பகுதியில் தேடுதல் நடத்தி மேலும் பல மரக்குற்றிகளை மீட்டுள்ளனர்.

சுமார் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான முதிரை மரக்குற்றிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாகண்டல் காட்டுப் பகுதியில் அதிகளவான சட்டவிரோத மரக்கடத்தல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும்வேளை அங்கு பாரிய ஒரு கும்பல் இவ்வாறு இயற்கை வளத்தினை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமையும் சட்ட விரோத் மணல் அகழ்வுகளும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (9-281)

## சுனாமி போலி ஒத்திகை பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு

(முல்லைதீவு)

முல்லைதீவு மாவட்டம் கரைதுறைபற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் முல்லைத்தீவு தொடக்கம் உப்பு மாவெளி வரையான கரையோர பாடசாலைகளில் சுனாமி போலி ஒத்திகை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று இன்று காலை 8 தொடக்கம் 9.30 மணி வரையான காலப் பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கமைவாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்,கரைதுறைபற்றுப் பிரதேச செயலகம்,முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை மற்றும் அனைத்து பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒருங்கிணைப்புடன் இது மேற்கொள்ளப்படுகின்றது.

அதேவேளை கரையோரத்திலுள்ள ஏனைய இடங்களான மணற்குடியிருப்பு,அளம்பில் ஆகிய இடங்களிலுள்ள முன்னெச்சரிக்கைக் கோபுரங்களும் இதன் போது ஒலியெழுப்பி பரீட்சிக்கப்படவுள்ளது. இது ஒரு ஒத்திகைச் செயற்பாடென்பதால் பொது மக்கள் குழப்பமடையாது ஒத்துழைக்குமாறு மேலதிக மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார். (9)

## ஓமந்தை கலாசார மத்திய நிலையம் திறக்கப்படுமா?

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை அரச வீட்டுத்திட்டப்பகுதியில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையம் திறக்கப்படாத நிலையில் பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றன.

கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் 12 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் இத்திட்டமானது 2015 ஆம் ஆண்டு இறுதிக்காலப்பகுதியில் நிறைவடைந்த போதிலும் இதுவரை திறக்கப்படாது காணப்படுகின்றது.

வவுனியா மாவட்ட செயலகக் கலாசார திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டு அமைக்கப்பட்ட இக்கட்டிடத்தினை திறப்பதற்கான திகதியை அரசியல் மட்டத்தில் இருந்து வழங்காததாலேயே திறப்பதற்கு முடியாதுள்ளதாக மாவட்ட செயலகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வவுனியாவில் கலாசார மத்திய நிலையத்தின் தேவை தொடர்பில் கலைஞர்களாலும் அதிகாரிகளுக்கு உணர்த்தப்பட்டு வந்த நிலையில் வவுனியா மாவட்டத்திற்கு கிடைத்த அத்திட்டத்தினை மக்கள் நடமாட்டம் குறைந்த ஓமந்தை அரச உத்தியோகத்தர் குடியிருப்பில் அமைத்தமை தொடர்பாக கலைஞர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.இதேவேளை வவுனியா அரச உத்தியோகத்தர் குடியிருப்பில் அரச உத்தியோகத்தர்கள் குறைந்தளவிலேயே வசித்து வரும் நிலையில் அங்கு உத்தியோகத்தர்களுக்கான வழங்கப்பட்ட பல காணிகள் பற்றைக்காடுகளாக காணப்படுகின்றன.



இந்நிலையில் வவுனியா மாவட்டத்தின் அதி முக்கியமான ஓர் திட்டத்தினை அங்கு அமைத்தமை தொடர்பில் கலைஞர்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். (9-299)

## கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தினரின் காணியை சுத்தப்படுத்துமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பொதுச் சந்தைக்கு அருகாமையில் உள்ள காணி துப்புரவு செய்யப்படாததன் காரணமாக விசப் பூச்சிகள் மற்றும் விலங்குகள் அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான காணி கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக துப்புரவு செய்யப்படாததன் காரணமாக பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. மரக்கறி, மீன் சந்தைக்கு அருகில் குறித்த காணி காணப்படுகின்றது. இக்காணியில் பெருமளவு நாய்களும் உலாவித் திரிவதன் காரணமாக சந்தைக்கு வருகின்ற பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த காணியினை துப்புரவு செய்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்கந்தபுரம் பொது அமைப்புகள் தெரிவிக்கின்றன. பயிர்ச் செய்கைக் காலங்களில் நீர்ப்பாசன வாய்க்கால்களை துப்புரவு செய்யுங்கள் என தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நீர்ப்பாசனத் திணைக்களம் பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதியில் தமது காணியினை துப்புரவு செய்யாமல் இருப்பதா? என பொது மக்கள் வினா எழுப்பி உள்ளனர். (9-350)






முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்திற்கு புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் பாடசாலையின் பழைய மாணவன் ப.நிராஜ் என்பவரினால் பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி இசைக்கருவிகள் கடந்த வாரம் பாடசாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்:-கண்டாவளை செய்தியாளர்)

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



(நெளுக்குளம்)

சுவிஸ் தமிழ் கல்விச் சேவையின் ஊடாக தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலய மாணவர்களுக்கு 11 துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி மேரி மோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் உதயகுமார், சுவிஸ் தமிழ் கல்விச் சேவையின் வவு னியா மாவட்ட இணைப்பாளர் திருமதி சிவகுமார் புஷ்பலதா, நகர சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

## கிளிநொச்சி மாவட்டத்தில் இரு குளங்களின் கீழ் 40 ஏக்கரில் நெற்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள புதுஐயன் குளம் மற்றும் ஐயன்கன்குளம் ஆகிய இரு குளங்களின் கீழ் 40 ஏக்கர் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ளடங்கும் புதுஐயன்குளம் மற்றும் ஐயன்கன் குளம் ஆகிய இரு குளங்களுக்குமான சிறுபோக பயிர்ச்செய்கை கூட்டங்கள் கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன.

இவ்வாறு நடைபெற்ற பயிர்ச் செய்கை கூட்டத்தில் புதுஐயன் குளத்தில் தற்போதுள்ள நீரின் அளவைக்கொண்டு 20 ஏக்கர் நிலப்பரப்பிலும் அதேபோல் ஐயன்கன்குளத்தில் தற்போதுள்ள நீரின் அளவைக்கொண்டு 20 ஏக்கரிலும் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.மேற்படி குளங்களின் கீழுள்ள 80 வரையான விவசாயிகள் தலா கால் (1/4) ஏக்கர் வீதம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளவுள்ளமை குறப்பிடத்தக்கது. (9-315)

## அடிக்கல் நாட்டி வைப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் அருள்மிகு சிறி சித்திவிநாயகர் ஆலயத்தின் புதிய மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட பாண்டியன்குளம் சிறி சித்தி விநாயகர் ஆலயம் கடந்த யுத்த காலத்தில் சேதமடைந்து காணப்பட்ட நிலையில் தற்போது இவ் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் பல்வேறு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் புதிய மூலஸ்தானத்தினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது. (9-315)

# பாரதம்

## டில்லி கலவரத்தில் 122 வீடுகள், 301 வாகனங்கள் எரிப்பு

### இடைக்கால அறிக்கை தகவல்



(டில்லி)

குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பாக டில்லியில் நடந்த கலவரத்தில் 122 வீடுகள், 301 வாகனங்கள் கலவரக்காரர்களால் எரிக்கப்பட்டதாக் இடைக்கால அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பாக டில்லியில் நடைபெற்ற போராட்டங்கள் காரணமாக கடந்த மாதம் 23, 24, 25 ஆம் திகதிகளில் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டது. இதில் 46 பேர் கொல்லப்பட்டனர். 300 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

கலவரத்தில் பலியானவர்களுக்கும் காயம் அடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படும் என்று டில்லி முதல்வர் கெஜ்ரிவால் அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து டில்லி கலவரத்தில் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசதுறை சார்பிலும் தனியார்துறை சார்பிலும் சேதம் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் முதல் இடைக்கால சேத விபர அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், டில்லி வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் 122 வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. அந்த 122 வீடுகளும் முழுமையாக எரிந்து நாசமாகிவிட்டன. 322 கடைகள் தீ வைத்தும் அடித்து நொறுக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

மொத்தம் 301 வாகனங்கள் கலவரக்காரர்களால் எரிக்கப்பட்டன. தொடர்ந்து கணக்கெடுப்பு நடந்து வருகிறது. எனவே பாதிக்கப்பட்ட வீடுகள், வாகனங்கள் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்புள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 18 குழுக்கள் ஆய்வு செய்து இந்த இடைக்கால சேத விபரங்களை தந்துள்ளன. த்னியார் குழுக்களின் சேத மதிப்பீடு இன்னும் முடிவடையவில்லை. இந்த வார இறுதிக்குள் சேத மதிப்பீடு முழுவதும் நிறைவு பெற்று விடும்.

கலவரம் தொடர்பாக 369 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. அதன் அடிப்படையில் 1,300 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் பலர் தேடப்பட்டு வருகிறார்கள்.

முதல்கட்ட ஆய்வுப்படி யமுனா விகார், முஸ்லதாபா பாத், சந்த் பாக், கோகல்புரி, பிரிஜ்புரி, பாகீரதி விகார் ஆகிய பகுதிகளில்தான் அதிகபட்ச பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் துணைநிலை இராணுவம் கண்காணிப்பு காரணமாக அமைதி திரும்பி உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-2)

## உலகை அச்சுறுத்த… உயிரிழப்பு 3200…

(பீஜிங்)

**கொரோனா வைரஸ் காரணமாக சர்வதேச… மூவாயிரத்து 200 இற்கும் மேற்பட்டோர் உயிரி… ஆயிரத்து 862 பேர் பாதிக்கப்பட்டனர்.**

அத்துடன், சீனாவில் நேற்று முன்தினம் வரையில் 38 பேர் உயிரிழந்தனர்.

இதன்காரணமாக சீனாவின் பிரதான நிலப்பரப்புகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது 2 ஆயிரத்து 981 ஆக உயர்வடைந்துள்ளதாக சீனாவின் தேசிய சுகாதார ஆணையகம் அறிவித்துள்ளது.

அத்துடன், அமெரிக்காவில் இதுவரையில் 28 பேர் கொரோனா தொற்றினால் பாதிக் கப்பட்டுள்ளனர். மேலும், ஐரோப்பிய நாடுகளில் இதுவரையில் கொரோனா தொற்று காரணமாக இரண்டாயிரத்து 502 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாலியில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது. நேற்று மாத்திரம் 27 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், ஸ்பெய்னிலும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட முதல் நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக

## கொரோனா வைரஸிற்கு எதிராக சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்

### சீன ஜனாதிபதி தெரிவிப்பு

(பீஜிங்)

கொரோனா வைரஸிற்கு எதிராக சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

பீஜிங்கிலுள்ள மருத்துவ ஆய்வு கூடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு என்பது ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்கும் பொதுவானதாகும்.

அந்த வகையில், கொரோனா வைரஸால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை எதிர்கொள்வதில் அனைத்து நாடுகளுக்கும் பங்குள்ளது.

எனவே, அந்த வைரஸ் பரவாமல் தடுத்து நிறுத்துவதற்குரிய தடுப்பு மருந்தையும் அந்த வைரஸை அழித்து, அதன் மூலம் கொரோனா வைரஸ் காய்ச்சலைத் தீர்ப்பதற்கான மருந்தையும் கண்டுபிடிப்பதில் உலக நாடுகள் தங்களிடயே ஒத்துழைக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தொடர்பாக தாங்கள் மேற்கொண்ட ஆய்வுத் தகவல்களை ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்' எனத் தெரிவித்தார். (ஜ-2)

## பிரேசிலில் பட… 18 பேர் பலி; 3…



## அரசியல் சாசனத்தில் பல்வேறு திருத்தங்கள்

### ரஷ்ய ஜனாதிபதி பரிந்துரை



(மொஸ்கோ)

அரசியல் சாசனத்தில் பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பரிந்துரை செய்தார்.

ரஷ்ய அரசியல் சாசனத்தில் அதிரடித் திருத்தங்களை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த ஜனவரி மாதம் பரிந்துரை செய்தார்.

1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன் முறையாகப் பரிந்துரை செய்யப்பட்ட குறித்த திருத்தங்களை நாடாளுமன்றம் ஏற்றுக் கொண்டது.

இந்நிலையில், மேலும் புதிய திருத்தங்களை மேற்கொள்வதற்கான 24 பக்க பரிந்துரையை அவர் தாக்கல் செய்துள்ளார்.

பல்வேறு தரப்பினருடன் ஆலோசித்ததன் பின்னர் குறித்த பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஜ-2)

## நவாஸ் ஷெரீப்பை நா… இங்கிலாந்து அரசிற்கு…

(லாகூர்)

தலைமறைவானதாக அறிவிக்கப்பட்ட நவாஸ் ஷெரீப்பை நாடுகடத்தக்கோரி இங்கிலாந்து அரசுக்கு கடிதம் எழுத பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. அல் அஜிசியா மில்ஸ் ஊழல் வழக்கில் அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு உடல் நிலை சரியில்லாததால், லண்டனில் சிகிச்சை பெற செல்ல வேண்டும் என்று அவர் தரப்பில் கூறப்பட்டது. அதை ஏற்று இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் பிணை வழங்கியது.

மற்றொரு ஊழல் வழக்கில் அவருக்கு லாகூர் உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது. மருத்துவ அறிக்கை அடிப்படையில், இந்த பிணையை அவ்வப்போது நீட்டிக்க பஞ்சர்ப் மாகாண அரசுக்கு உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது.

அதையடுத்து, கடந்த நவம்பர் மாதம், நவாஸ் ஷெரீப் சிகிச்சை பெறுவதற்காக லண்டனுக்கு சென்றார். அங்கு அவர் உறவினர்களுடன் ஒரு உணவகத்தில் சாப்பிடுவது போன்ற புகைப்படம் வெளியானது. எனவே, அண்மையில் பஞ்சாப் மாகாண அரசு அவருக்கு பிணையை நீட்டிக்க மறுத்து விட்டது. பிணையை நீட்டிக்க சட்டரீதியான, தார்மீக, மருத்துவ ரீதியான எந்தக் காரணமும் இல்லை என்று தெரிவித்தது. அதைத்தொடர்ந்து, நவாஸ் ஷெரீப், தலைமறைவு குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில், நவாஸ் ஷெரீப்பை நாடு கடத்துமாறு இங்கிலாந்து அரசுக்கு கடிதம் எழுத பாகிஸ்தான் அரசு முடிவு

# வெளிநாடு



# ...த்தும் கொரோனா ...00ஆக அதிகரிப்பு

...சர்வதேச ரீதியில் இதுவரை ...ர் உயிரிழந்துள்ளதுடன், 92



அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சளித் தொல்லையால் அவதிப்படுவதால் முதன்முறையாக ஞாயிறு பிரார்த்தனையில் கலந்து கொள்ளப்போவதில்லையென பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்திருந்தார்.

இத்தாலியில் கொரோனா தாக்கம் தீவிரமடைந்து வரும் நிலையில், அவரின் இந்நிலைமை குறித்து பலரும் அச்சமடைந்தனர். இதனையடுத்து பாப்பரசர் கொரோனா வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இப்பரிசோதனையில் அவருக்கு வைரஸ் தொற்று இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாடசாலைகளுக்கு நான்கு வாரங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. (ஜ-2)

# படகு விபத்து 30 பேர் மாயம்

(றியோடிஜெனிரே)

பிரேசிலில் இடம்பெற்ற படகு விபத்தில் 18 பேர் உயிரிழந்ததுடன், 30 பேர் காணாமல் போயுள்ளனர்.

பாரா மாகாணம், சான்டாரெம் நகரை நோக்கி ஜாரி நதியில் சென்று கொண்டிருந்த போது படகு ஒன்று திடீரென நீருக்குள் மூழ்கியது.


இதனையடுத்து குறித்த பகுதியில் சென்று கொண்டிருந்தவர்களும் பின்னர் வந்த மீட்புக் குழுவினரும் படகில் இருந்த 46 பேரை மீட்டனர்.

எனினும், நீரில் மூழ்கி 18 பேர் உயிரிழந்தனர். அத்துடன் படகிலிருந்த 30 பேர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

இந் நிலையில் காணாமல் போனவர்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து பிரேசில் கடற்படை விசாரணை செய்து வருகிறது. (ஜ-2)

# ...நாடுகடத்த வேண்டும் ...ற்கு பாகிஸ்தான் கடிதம்



செய்துள்ளது. பிணையை நீட்டிக்க முடியாது என்ற பாகிஸ்தான் அரசின் முடிவை எதிர்த்து நீதிமன்றில் நவாஸ் ஷெரீப் வழக்கு தொடருவார் என்று அவரது கட்சியின் நிர்வாகி தெரிவித்தார். (ஜ-2)

# அமெரிக்காவில் சூறாவளி

## 25 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டென்னிசி மாநிலத்தில் வீசிய கடும் சூறாவளியில் சிக்கி 25 பேர் பலியாகியுள்ளனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் உள்ள டென்னிசி மாநிலத்தில் நேற்று முன்தினம் கடுமையான சூறாவளி தாக்கியது. அதிவேகத்தில் சுழன்றடித்த இந்த சூறாவளியால் ஏராளமான கட்டடங்கள் சேதமடைந்தன. பல வீடுகளின் கூரைகள் முழுவதும் சூறாவளியில் சிக்கி பறந்தன.

மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் சாய்ந்தன. இதனால் பல்வேறு பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது. பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்தனர். சாலைகளில் நின்ற வாகனங்கள் மற்றும் விமானங்களும் சூறாவளியின் பிடியில் இருந்து தப்பவில்லை. சாலைகளில் ஆங்காங்கே வாகனங்கள் கவிழ்ந்து கிடந்தன.

சூறாவளியில் சிக்கியும் கட்டட இடிபாடுகளில் சிக்கியும் 25 பேர் பலியாகி உள்ளனர். சுமார் 150 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.





மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நாளை வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிடவுள்ளதாக ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்காக பிரார்த்தனை செய்வதாகவும் அவர்களுக்கு உரிய உதவிகள் செய்யப்படும் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். (ஜ-2)

# சிரியாவில் ரஷ்யா போர்க்குற்றம்

## ஐ.நா.குழு குற்றச்சாட்டு

(ஜெனிவா)

சிரியாவில் ரஷ்யா போர்க் குற்றங்களை இழைத்துள்ளது என சிரியா தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் ஐ.நா. குழுவொன்று குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

2019 ஜுலை முதல் இந்த வருட ஆரம்பம் வரையான காலப்பகுதிவரை சிரியாவில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாக வைத்து சிரியா தொடர்பான சுயாதீன சர்வதேச விசாரணை ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் ரஷ்ய விமானங்கள் பொதுமக்களின் நிலைகள் மீது நேரடியாக தாக்குதல்களை மேற்கொண்டன என்பதற்கான அதிக ஆதாரங்கள் காணப்படும் இரு சம்பவங்கள் குறித்து விசாரணை ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

மராட் அல் நுமான் என்ற பகுதியில் உள்ள சந்தையொன்றின் மீது கடந்த வருடம் 22 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் குறித்தும் இந்த தாக்குதலில் நான்கு சிறுவர்கள் உட்பட 43 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 109 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இரண்டாவது தாக்குதல் ஹாஸ் என்ற பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பகுதியொன்றில் இடம்பெற்றது என குறிப்பிட்டுள்ள ஐ.நா.விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் நான்கு குழந்தைகள், 8 பெண்கள் உட்பட 20 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இரண்டு தாக்குதல்களிலும் ரஷ்ய விமானங்கள் இராணுவ இலக்கொன்றின் மீது தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்றும் மாறாக பொதுமக்கள் இலக்குகள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டு யுத்தக்குற்றங்களை இழைத்தன என ஐ.நா.அறிக்கை தெரிவித்துள்ளது.

சிரியாவில் ரஷ்யா போர்க் குற்றங்களை இழைத்துள்ளது என ஐ.நா. குற்றம்சாட்டுவது இது முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# லிபியாவிற்கான ஐ.நா.விசேட தூதுவர் பதவியை இராஜினாமா செய்தார்


(திரிபோலி)

லிபியாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவர் கஸன் சலாம் தனது பதவியினை இராஜினாமா செய்துள்ளார்.

லிபியாவில் சமாதானத்தை ஏற்படுத்த தாம் மேற்கொள்ளும் முயற்சிகள், தமது உடல் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிப்பதாகத் தெரிவித்தே அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.


தனது உடல்நலம் தொடர்ந்தும் மன அழுத்தத்தை அனுமதிக்காது என்பதால், தனது கடமைகளிலிருந்து விடுவிக்குமாறு ஐ.நா.பொதுச் செயலாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இவரது இராஜினாமா கடிதத்தினை ஐ.நா.பொதுச் செயலாளர் ஏற்றுக் கொண்டாரா? இல்லையா? என்பது குறித்து தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை. (ஜ-2)



# வேட்புமனுவில் பிக்குகளுக்கு இடமளிக்கக்கூடாது

## அஸ்கிரிய மகாநாயக்கர் வலியுறுத்து



(கொழும்பு)

பௌத்த பிக்குகள் எதிர்காலத்தில் அரசியல் பதவிகளைக் கோருவதைத் தடுக்க தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் உடனடியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர், வண.வரகொட ஞானரத்ன தேரர் வலியுறுத்தினார்.

அஸ்கிரிய மகா விகாரைக்கு தேர்தல்கள் ஆணையத் தலைவர் நேற்று முன்தினம் சென்றிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் தேர்தல் சட்டம் பழைமையானது என்பதால், அவசரமாக அதில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் பௌத்த பிக்குகளுக்கு இடமளிக்கக் கூடாது.

பௌத்த மதகுருமார் அரசியல் பதவிக்குப் போட்டியிட அனுமதிக்கப்பட்டால், அது புத்த சாசனத்துக்கு பெரும் அடியாக இருக்கும்" என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-2)

# வடக்கிற்கு அதிக முதலீடுகள் தேவை

## அனைத்துலக தொழிலாளர் அமைப்பு வலியுறுத்து



(கொழும்பு)

போரினால் சிதைந்த வடக்கு மாகாணத்திற்கு அதிக முதலீடுகள், ஒழுக்கமான வேலை நிலைமைகள் மற்றும் பெண்களுக்கு அதிக வாய்ப்புகள் தேவைப்படுவதாக அனைத்துலக தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ) தெரிவித்துள்ளது.

அனைத்துலகத் தொழிலாளர் அமைப்பின், இலங்கைக்கான பணிப்பாளர் சிம்ரின் சிங் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வடக்கு மாகாணத்தில் தனியார் துறை முதலீடுகளுக்கு அடையாளம் காணப்பட்ட இடையூறுகள் குறித்து நடத்தப்பட்ட கலந்துரையாடலில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தின் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய, அடுத்த கட்டத்திற்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டிய நேரம் இது.

பத்து நாட்களுக்கு முன்பு வடக்கில் இருந்தோம், புதிய ஆளுநரை சந்தித்தோம்.

நீண்டகால உள்நாட்டுப்போரின் தாக்கத்திலிருந்து வடக்கு மாகாணம் இன்னும் மீண்டு வருகிறது. அதன் மறுமலர்ச்சிக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் தேவைப்படுகின்றன.

அதற்கு சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் கௌரவமான நிலைமைகளில் பெண்களுக்கு ஒழுக்கமான மற்றும் உற்பத்தி வேலைகளைப் பெறுவதற்கான அதிக வாய்ப்புகளையும் உறுதி செய்ய வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார். (ஜ-2)

# தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு; விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இந்த விடயங்கள் முன்னெடுக்கப்படுவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. விண்ணப்பங்களை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் சமர்ப்பிக்குமாறு அரச ஊழியர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இதற்காக எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனு கோரப்படவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் மே மாதம் 14 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# காலி மாவட்டத்தில் களமிறங்கும் டில்ஷான்

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் திலகரத்ன டில்ஷான் எதிர்வரும் பொதுத் தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிடப்போவதாக அறிவித்தார்.

அதன்படி டில்ஷான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எனக்கு தற்போது வயது 43. போரை முடிவுக்கு கொண்டுவர 2005 முதல் 2015 வரை முயன்ற தலைவரை நான் மதிக்கிறேன். அவரது தலைமையின் கீழ் பொருளாதார வளர்ச்சியை நோக்கி முன்னேற்றம் காணப்பட்டது. இதனை கருத்திற் கொண்டே கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க முடிவு செய்தேன்.

கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி கொண்டபோது இன, மத வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் மக்களிடமிருந்து தனக்கு கிடைத்த ஆதரவையும் பாராட்டுகளையும் நினைவுகூர்ந்த டில்ஷான், தனது அரசியல் வாழ்க்கையிலும்



இவ்வாறான ஆதரவை மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (ஜ-2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நம்பிக்கை

ஒரு தடவை நாரதர் ஒரு தெரு வழியாக போய்க்கொண்டிருந்தார். வழியிலே ஒருவர் வேத சாஸ்திரம் எல்லாம் படித்துக்கொண்டு அமர்ந்திருந்தார். அவர் நாரதரைப் பார்த்து "எங்கே போய்க்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கடவுளைப் பார்த்துவிட்டு வரலாம் என்று போய்க்கொண்டிருக்கிறேன்!" என்றார் நாரதர். "அப்படி என்றால் அவரிடம் எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கேட்டுக்கொண்டு வாருங்களேன்!" என்றார் இவர்.

"சரி கேட்டுக்கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு நாரதர் நடந்தார். கொஞ்சத் தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒரு தொழிலாளி செருப்பு தைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார். அந்த ஆளும் அதே மாதிரி கேட்டார்.

"எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கடவுளிடம் கேட்டுக் கொண்டு வாருங்களேன்!" என்றார்.

அவரிடமும் சரி என்று சொல்லிவிட்டு நாரதர் நேராக வைகுண்டத்திற்கு வந்து சேர்ந்தார். கடவுளைப் பார்த்தார். இவர்கள் இரண்டு பேரும் சொல்லி அனுப்பிய விடயத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு கடவுள் சொன்னார்...

"அந்தச் செருப்பு தைக்கும் தொழிலாளி உடல் நீத்ததும் உடனே என்னை வந்தடைவான். ஆனால் அந்த சாஸ்திரம் படித்த ஆள் இப்போதைக்கு என்னிடம் வந்து சேரமாட்டான். அவன் இன்னும் பல பிறவிகள் எடுத்து அங்கேயே இருக்க வேண்டியிருக்கிறது... எப்போது இங்கே வந்து சேருவான் என்று எனக்கே தெரியாது!" என்றார்.

நாரதருக்கு இதனுடைய இரகசியம் என்ன என்பது புரியவில்லை... "எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றார் கடவுளிடம்!

"சீக்கிரம் புரிந்துகொள்வாய்! நீ திரும்பிப் போகும்போது நான் இங்கே வைகுண்டத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று கேட்டால்... ஒரு ஊசியின் துவாரத்தில் ஒரு யானையை கோர்த்துக்கொண்டிருக்கிறேன் என்று அவர்களிடம் சொல்லு!" என்றார் கடவுள் சிரித்துக்கொண்டே.

நாரதர் பூமிக்குத் திரும்பினார். "கடவுளைப் பார்த்தீர்களா...? எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தார் வேத சாஸ்திரம் படித்தவர்.

"ஓ...பகவானா...?அவர் யானையை ஊசியின் காதிலே நுழைத்துக்கொண்டிருந்தார்... பார்த்தேன்!" என்றார் நாரதர். "ஊசி காதில் யானையா? அது எப்படி முடியும்... நீங்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன்!" என்றார். "சரி... இந்த ஆளுக்கு இறைவன் பேரில் நம்பிக்கை இல்லை!" என்பதை நாரதர் புரிந்து கொண்டார்.

அடுத்தபடியாக அந்தத்தொழிலாளி இருந்த இடத்துக்குப் போனார். "இறைவனைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார் அவர்.

"பார்த்தேன்... ஒரு ஊசி துவாரத்தில் யானையை கோர்த்துக் கொண்டிருந்தார்!" என்று சொல்லிவிட்டு நாரதர் அந்த ஆள் முகத்தைக் கவனித்தார். அந்தத் தொழிலாளி இதைக் கேட்டுவிட்டு கொஞ்சம் கூட ஆச்சரியப்படவில்லை!

"அவரால் முடியாத காரியம் கூட உண்டா?" என்றார்.

"என்ன இப்படிச் சொல்கிறாய்? ஊசியின் துவாரத்தில் யானையை கோர்க்க முடியும் என்று நீ நம்புறாயா?" என்று கேட்டார் நாரதர்.

"நிச்சயமாக நம்புகிறேன்!" என்றார் அவர்.

"அது எப்படி?" என்று கேட்டார் இவர்.

"இதோ பாருங்கள்... நான் இந்த ஆலமரத்தடியிலேதான் தினமும் அமர்ந்திருக்கிறேன். தினமும் இந்த மரத்தில் இருந்து எவ்வளவு பழம் கீழே விழுகிறது? இந்தப் பழத்தில் இருக்கும் ஒவ்வொரு விதையிலேயும்... உள்ளே, ஒரு ஆலமரம் இருக்கு!

ஒரு சின்ன விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் இருக்க முடியும் என்னும் போது... ஊசி துவாரத்திலே கடவுள் யானையை நுழைய வைத்தார் என்பதை ஒத்துக்கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது?" என்று மிகவும் சர்வசாதாரணமாக பதில் சொன்னார் அந்தத் தொழிலாளி. நாரதர் யோசித்தார்.

இந்தத் தொழிலாளி வேத சாஸ்திரங்களையெல்லாம் படிக்க வில்லை என்றால் கூட அறிவுபூர்வமாக சிந்தித்து இறைவனை நம்புகிறான்... அதனாலே தான் கடவுள் இந்த ஆளுக்கு விரைவில் முக்தி கிடைக்கும் என்று சொன்னார் என்பதைப் புரிந்துகொண்டார்.

இந்தக் கதையிலே வரும் கடவுள்–நாரதர்–வைகுண்டம் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஒரு சின்ன விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் தூங்கிக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. அந்தரத்தில் ஆயிரம் கிரகங்கள் சுற்றிக்கொண்டிருப்பது உண்மை.

இந்த உண்மைகள் அதிசயமாக நமக்குத் தெரிவதனாலே அதை நம்பாமல் இருந்துவிட முடியாது.

இயற்கையை பரிபூரணமாக நம்புங்கள். அந்த நம்பிக்கையே நமது வாழ்வுக்கு ஆதாரம் என்பதை விளக்குவதற்காகத்தான் இந்தக் கதை.

இந்தக் காலத்தில் நமது பிள்ளைகளுக்கு எல்லாம் இதுமாதிரி நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது! ஒருநாள் ஒரு சிறுவனிடம் கேட்டேன். "ஏனப்பா...கடவுள் ஒரு பானைக்குள்ளே ஒரு யானையை நுழைய வைத்துவிட்டார் என்று சொன்னால் அதை நீ நம்புவாயா?" என்று கேட்டேன்.

"நம்புவேன் சேர்... அது ஒன்றும் பெரிய அதிசயமில்லை!" என்றான். "எப்படி?" என்று கேட்டேன்.

"அந்தப் பானை அந்த யானையைவிட பெரிதாக இருந்திருக்கும்... அவ்வளவுதான்!" என்றான் சேர்.



# முஸ்லிம் அரசியல் தலைமைகள் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும்

## அசாத் சாலி வேண்டுகோள்

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல்வாதிகள் பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து ஓரணியாகப் போட்டியிட்டு "பேரம்" பேசும் சக்தியாக உருவாக வேண்டும் என, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், முன்னாள் மேல் மாகாண ஆளுநருமான அசாத்சாலி வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முஸ்லிம் அரசியல் தலைமைகள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து ஓரணியாகப் போட்டியிட வேண்டும். அதன்மூலம், நாட்டின் "பேரம்" பேசும் சக்தியாக மாற வேண்டும்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்துக் கட்சிகளும் வேட்புமனுத் தாக்கலுக்குத் தயாராகி வருகிறது. இச்சந்தர்ப்பத்தில், சகல முஸ்லிம் கட்சிகளும் வாக்குகளைப் பிரிப்பதை விடுத்து ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் கட்டாயத்தேவையும் அவசியமுமாகும். இது தொடர்பில், தேசிய ஐக்கிய முன்னணி இதற்கான முன்மொழிவை அனைத்துக் கட்சிகளிடமும் தெரிவித்துள்ள போதிலும் சாதகமான பதில் எதுவும் இதுவரையிலும் கிடைக்கவில்லை.

பொதுஜன பெரமுனவுக்கு மூன்றிலிரண்டு தனிப்பெரும்பான்மையை எடுப்பதற்கு எவ்வகையிலும் சாத்தியமில்லை.


எனவே, இத்தருணத்திலாவது முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்தால் மாத்திரமே பலமான ஒரு பேரம் பேசும் சக்தியாக உருவெடுக்க முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-2)

# இந்துமா சமுத்திரத்தின் பாதுகாப்பு குறித்து இலங்கை - இந்தியக் கடற்படையினர் பேச்சு

(கொழும்பு)

இந்துமா சமுத்திரத்தின் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் அங்கு இடம்பெறக் கூடிய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பது குறித்து இலங்கை மற்றும் இந்திய கடற்படை உயர் அதிகாரிகளுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இடம்பெறும் ஒன்பதாவது உயர்மட்ட கலந்துரையாடல் இதுவாகும் என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்தது.



இலங்கை கடற்படை தலைமையகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் இந்திய கடற்படையின் உயர்மட்ட அதிகாரி ரியர் அட்மிரல் அதுல் ஆனந்த் உள்ளிட்ட ஏனைய கடற்படை வீரர்களும், இலங்கை கடற்படையின் பணிப்பாளர் நாயகம் நந்தன ஜயரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது கடற்படையினரின் முக்கியத்துவம் பற்றி இரு நாடுகளினதும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கலந்துரையாடல்களின் நிறைவில் இந்திய கடற்படையின் உயர்மட்ட அதிகாரி ரியர் அட்மிரல் அதுல் ஆனந்த் இலங்கைக் கடற்படைத் தளபதி வைட் அட்மிரல் பியல் டி சில்வாவை சந்தித்து கலந்துரையாடினார். (ஜ-2)

# மணல் கடத்தியவர் தப்பியோட்டம் மோட்டார் சைக்கிள் கைப்பற்றல்


(அம்பாறை)

சட்டவிரோதமாக உரப்பை மூலம் கடல் மணல் கடத்தப்பட்ட நிலையில் கடத்தலில் ஈடுபட்டவர் தப்பிச் சென்றுள்ளதாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமைத்திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் சந்தேகநபர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டது.

அம்பாறை, சாய்ந்தமருது முதல் நிந்தவூர் வரையான கடற்கரையோரங்களில் சட்டவிரோதமாக அண்மைக்காலமாக மண் கடத்தல் இடம்பெற்று வருவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து நேற்று முன்தினம் இரவு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமை திணைக்கள உத்தியோகத்தர் குழு சுற்றிவளைப்புகளை மேற்கொண்டிருந்தது.

இதன்போது மோட்டார் சைக்கிள் மூலம் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத மணல் கடத்தல் முயற்சி ஒன்றினைத் தடுத்து நிறுத்தியதுடன் கடத்தலை மேற்கொள்ளப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர்.



அத்துடன் சுமார் 20 இற்கும் அதிகமான மண் மூடைகள் கைப்பற்றப்பட்டு மீண்டும் கடற்கரையில் கொட்டப்பட்டன. மேலும் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் தப்பிச்சென்ற சந்தேகநபர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-2)

# கூட்டுப் பயிற்சி பரிமாற்று நிகழ்ச்சி ஆரம்பம்



(திருமலை)

இலங்கைக் கடற்படை மற்றும் அமெரிக்கக் கடற்படை இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சி பரிமாற்று நிகழ்ச்சி கடந்த 2 ஆம் திகதி திருகோணமலை சிறப்புப் படகு படைத் தலைமையகத்தில் ஆரம்பமானது.

இப் பயிற்சியின் தொடக்க விழாவின் பிரதம விருந்தினராக 4 ஆவது துரித தாக்குதல் ரோந்துப் படகு படையின் கட்டளை அதிகாரி கப்டன் தம்மிக விஜேவர்தன கலந்துகொண்டதுடன் இந் நிகழ்வுக்காக கடற்படை அதிகாரிகள், வீரர்கள் மற்றும் அமெரிக்க இராணுவ சிறப்புப் படைகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மேலும் 4 ஆவது விரைவு தாக்குதல் படகுகள் குழுவின் மற்றும் சிறப்புப் படகுப் படைப் பிரிவின் 35 வீரர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக பொதுமக்கள் உதவியற்ற நிலையில்

(கொழும்பு)

"ஆளுநராக எனக்கு இன, சாதி வேறுபாடுகள் இல்லை. தராதரம் காரணமாக நான் சேவைகளைச் செய்வேன்" என்று கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

இருப்பினும், மக்களின் அடக்குமுறை அழுத்தம் காரணமாக அதிகாரிகள் உதவியற்றவர்கள் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

கல்முனையின் புலவரமணி சைபுதீன் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டை நேசிக்கும் நாட்டிற்காக உழைக்கும் மக்களை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து நாங்கள் எப்போதும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால் ஒவ்வொரு முறையும் நான் இந்த மக்களைச் சந்திக்கும்போது, அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் எங்கள் அதிகாரிகளுக்கு எதிரானவை.

நான் இதைப் பற்றி பேசவில்லை. எனக்கு வந்த மிகப்பெரிய குற்றச்சாட்டு, எங்கள் அதிகாரிகள் எங்கள் மக்கள் மீது செலுத்தும் அழுத்தம் எனத் தெரிவித்தார். (ஜ-2)



# கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் மீள பிரிட்டனுக்கு அனுப்ப ஆட்சேபனை இல்லை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கழிவு அடங்கிய கொள்கலன்களை மீள் ஏற்றுமதி செய்வதற்கு ஆட்சேபனை இல்லை என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்தோடு குறித்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை நீதியரசர்களான ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் நீதிபதி அர்ஜுன் ஒபேசேகர முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டதுடன் குறித்த வழக்கு அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைப்பட்டது.

எனவே இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால தடையுத்தரவை மீறாமல் சரியான விதிமுறைகளுடன் அதனை செயற்படுத்தி அதன் விளக்கத்தினை நீதிமன்றுக்கு அறியப்படுத்துமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மத்திய சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

மேலும் கழிவுகள் அடங்கிய கொள்கலன்களின் உரிமையாளர் தமது நிறுவனம் என்பதால், உரிய விநியோக செயன்முறை இல்லாததன் காரணமாக அதனை மீள் ஏற்றுமதி செய்வதில் தமது நிறுவனத்துடன் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ள முடியாதுள்ளதாக சிலோன் மெட்டல் ப்ரொசசிங் நிறுவனம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

எனினும் மீள் ஏற்றுமதி செய்வது தொடர்பாக தமது நிறுவனத்திற்கு ஆட்சேபனை இல்லை என வழக்கின் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள ஹேலிஸ் ப்ரீ ஸோன் நிறுவனம் நீதிமன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

12

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**மாகாண சபையின் நிதிசார் விடயம் தொடர்பில் நியதிச்சட்டங்கள் பற்றிய சிறப்பு நடவடிக்கைமுறை 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 24**

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 24(1)-** எவ்விடயம் தொடர்பில் நியதிச்சட்டங்கள் ஆக்குவதற்கு மாகாண சபைக்குத் தத்துவம் இருக்கின்றதோ, அத்தகைய ஏதேனும் விடயம் தொடர்பிலான நியதிச்சட்டமொன்றானது, பின்வரும் எவையேனும் விடயங்களுக்கு அத்தகைய நியதிச்சட்டம் ஏற்பாடு செய்தால், ஆளுநரின் விதப்புரையின் மீதின்றி மாகாண சபையொன்றில் கொண்டுவரப்படுதலோ அல்லது முன்மொழியப்படுதலோ ஆகாது.

அவ் விடயங்களாவன,

(அ)வரியெதனையும் சுமத்துதல், ஒழித்தல், குறைத்தல், மாற்றுதல் அல்லது ஒழுங்குபடுத்துதல்.

(ஆ)மாகாணத்தின் நிர்வாகம் தொடர்பில் பொறுப்பேற்கப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட வேண்டிய எவையேனும் நிதி கடப்பாடுகள் தொடர்பிலான சட்டத்தைத் திருத்துதல்.

(இ)மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்தல்.

(ஈ)செலவினம் எதையும் மாகாணத்தின் மாகாண நிதியத்தின்மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமென வெளிப்படுத்துதல் அல்லது அத்தகைய ஏதேனும் செலவினத் தொகையை அதிகரித்தல்.

(உ)மாகாணத்தின் மாகாண நிதியம் காரணமாகப் பணம் பெறுதல் அல்லது அத்தகைய பணத்தைக் கட்டுக் கோப்பில் வைத்திருத்தல் அல்லது வழங்குதல்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 24(2)-** நியதிச் சட்டம் ஒன்றானது, குற்றப்பணங்களை அல்லது வேறு பண வகையான தண்டங்களைச் சுமத்துவதற்கு அல்லது உரிமங்களுக்கு அல்லது ஆற்றப்பட்ட சேவைகளுக்குக் கட்டணங்கள் வேண்டிப் பெறுவதற்கு அல்லது செலுத்தப்படுவதற்கு அல்லது உள்ளூர் நோக்கங்களுக்காக ஏதேனும் உள்ளூர் அதிகார சபையினால் அல்லது குழுவினால் வரி எதுவும் சுமத்தப்படுவதற்கு, ஒழிக்கப்படுவதற்கு, குறைக்கப்படுவதற்கு அல்லது ஒழுங்குபடுத்தப்படுவதற்கு அது ஏற்பாடு செய்கின்றதென்ற காரணத்தினால் மட்டும் மேற்கூறப்பட்ட எவையேனும் விடயங்களுக்கு ஏற்பாடு செய்கின்றதென்று கருதப்படுதல் ஆகாது.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 24(3) -** ஒரு நியதிச் சட்டமானது சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் மாகாணமொன்றின் மாகாண நிதியத்திலிருந்து செலவினத்தை உள்ளடக்குமென்றால், நியதிச் சட்டத்தைச் சீர்தூக்கிப்பார்த்தல் பற்றி ஆளுநரால் அச் சபைக்கு விதப்புரை செய்யப்பட்டிருந்தாலே ஒழிய மாகாணத்தின் மாகாண சபையினால் நிறைவேற்றப்படுதல் ஆகாது.

**மாகாண சபையொன்றின் வருடாந்த நிதிக் கூற்று**

வருடாந்த நிதிக்கூற்றறிக்கை மாகாண பிரதான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைக் கொண்டிருக்கும். மாகாண ஆளுநர் ஒவ்வொரு நிதி ஆண்டு தொடர்பாகவும் அந்த நிதி ஆண்டு ஆரம்பமாவதற்கு முன் ஆகக்குறைந்தது ஐந்து மாதங்களுக்கு முன்னராக என்றாலும் மாகாணத்தின் மாகாணசபைக்கு மாகாண வரவு மற்றும் செலவு அறிக்கையை (வருடாந்த நிதிக் கூற்றறிக்கை) சமர்ப்பிக்க வேண்டுமென்று அரசியலமைப்பு கோருகின்றது.

நிதி ஆணைக்குழு செய்த பரிந்துரைகள் மீது தேசிய வரவு-செலவுத்திட்டத்திலிருந்து வருடாந்த ஒதுக்கீடு மாகாணங்களுக்கு மாற்றப்பட்டிருக்கும். ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மாகாண நிதிக்கூற்றறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாகாண நிதிக்கட்டளைகள் ஆகியவற்றுக்கு அமைவாக வேறு வேறு துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, வருடாந்த மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது தயாரிக்கும் முறை பற்றி மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 25 விளக்குகிறது.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 25(1) -** இச் சட்டப்பிரிவின்படி ஒவ்வொரு நிதியாண்டின் தொடர்பிலும் அத்துடன் அத்தகைய நிதியாண்டு முடிவுறுவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து மாதங்களுக்கு முன்னர் "வருடாந்த நிதிக் கூற்று" எனக் கூறப்படும் அவ்வாண்டுக்கான மாகாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகைகள், செலவினம் பற்றிய கூற்றொன்றை அம்மாகாணத்தின் மாகாண சபைமுன் மாகாணமொன்றின் ஆளுநர் இடச் செய்தல் வேண்டும். இது தயாரிக்கும் முறை பற்றி மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 25(2) விளக்குகிறது.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 25(2)-** வருடாந்த நிதிக் கூற்றில் தரப்பட்டுள்ள செலவினத்தின் மதிப்பீடுகள், தனிவேறாக பின்வருமாறு காட்டுதல் வேண்டும்.

(அ)மாகாணத்தின் மாகாண நிதியம் மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமென இச் சட்டத்தினால் விவரணம் செய்யப்பட்ட செலவினத்தைச் சமாளிப்பதற்குத் தேவைப்பட்ட பணத்தொகைகள் அத்துடன்,

(ஆ)மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து செய்யப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற வேறு செலவினத்தைச் சமாளிப்பதற்குத் தேவைப்பட்ட பணத்தொகைகள்.

அத்துடன் அம் மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கு மீதான செலவினத்தை ஏனைய செல்வினத்திலிருந்து வேறு பிரித்துக்காட்டுதல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 25(3)-** பின்வரும் செலவினமானது மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமாக இருத்தல் வேண்டும்.

(அ) ஆளுநரின் வேதனங்களும் படிகளும்.

(ஆ)மாகாணம் தொடர்பில் வட்டி, கடன்தீர்நிதியில் இருந்தான கடன் குறைப்புக் கொடுப்பனவுகள், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட வேறு செலவினம் என்பவற்றை உள்ளடக்குகின்றனவான இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து முற்பணமாக வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான விதிப்பனவுகளும்.

(இ)மாகாண சபையின் தவிசாளரினதும் பிரதித் தவிசாளரினதும் சம்பளங்களும் படிகளும்.

(ஈ)மாகாண சபைக்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபையின் ஏதேனும் தீர்ப்பை, தீர்வையை அல்லது அளிப்பைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற எவையேனும் பணத் தொகைகள்.

(உ) அவ்வாறு பொறுப்பாக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பினால் அல்லது பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டத்தினால் அல்லது மாகாண சபையினால் ஆக்கப்படும் நியதிச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்படுகின்ற வேறு ஏதேனும் செலவினம்.

**மதிப்பீடுகள் தொடர்பாக மாகாண சபையிலான நடவடிக்கை முறை**

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 26(1)-** மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படும் செலவினம் தொடர்பான மதிப்பீடுகளுள் அத்தகையவை மாகாண சபையின் வாக்குக்குச் சமர்ப்பிக்கப்படுதலாகாது.

ஆனால் இவ்வுட்பிரிவில் உள்ள எதுவும் இம் மதிப்பீடுகளில் எது பற்றியும் மாகாண சபையில் கலந்தாராய்வதனைத் தடுப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 26(2) -** வேறு செலவினத்துடன் தொடர்புள்ளனவான சொல்லப்பட்ட மதிப்பீடுகளுள் அத்தகையவை மாகாண சபைக்கான மானியக் கொடைக்கான கோரிக்கைகள் என்ற வடிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அத்துடன் ஏதேனும் கோரிக்கைக்கு இசைவதற்கு அல்லது இசைய மறுப்பதற்கு அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட தொகையின் குறைப்பொன்றிற்கு அமைய ஏதேனும் கோரிக்கைக்கு இசைவதற்கு மாகாண சபைக்கு தத்துவம் இருத்தல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 26(3)-** மானியக் கொடைக்கான கோரிக்கை எதுவும் ஆளுநரின் விதப்புரையின் மீதல்லாது செய்யப்படுதலாகாது.

**ஒதுக்கீட்டு நியதிச்சட்டம் இயற்றல்**

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 27(1)-** சபையினால் மேற்கூறப்பட்ட 26 ஆம் பிரிவின் கீழான மானியக் கொடைகளுக்கு இசைவளிக்கப்பட்ட பின்னர் முடிந்தளவு விரைவாக, மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து,

(அ) மாகாண சபையினால் அவ்வாறு செய்யப்பட்ட மானியக் கொடைகளை அத்துடன்,

(ஆ) மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட ஆனால் சபையின் முன்பு முன்னரே வைக்கப்பட்ட கூற்றில் காட்டப்பட்ட தொகையை எச்சந்தர்ப்பத்திலும் விஞ்சாத செலவினத்தை

ஈடுசெய்யத் தேவையான எல்லாப் பணங்களின் ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டமொன்று அங்கு கொணரப்படுதல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 27(2)-** அவ்வாறு செய்யப்பட்ட ஏதேனும் மானியக் கொடையின் தொகையை வேறுபடுத்துகின்ற அல்லது அம்மானியக் கொடையின் சேரிடத்தை மாற்றம் செய்கின்ற அல்லது மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தின் தொகையை வேறுபடுத்துகின்ற பயனைக் கொண்டுள்ள ஏதேனும் அத்தகைய நியதிச் சட்டத்திற்கு திருத்தமெதுவும் மாகாண சபையில் முன்மொழியப்படுதலாகாது.

அத்துடன் இவ்வுட்பிரிவின் கீழ் திருத்தமொன்று ஏற்கத்தக்கதல்லாது என்ற தலைமை தாங்கும் ஆளின் முடிவு இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

**மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 27(3)-** இச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய இப் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின்கீழ் அல்லது மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணமெதுவும் மீளப்பெறப்படுதலாகாது.

**குறைநிரப்பு மானியக் கொடைகள் - மாகாணசபைகள் சட்டத்தின் பிரிவு 28**

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 28(1) - ஒரு மாகாண சபையின் ஆளுநர்

(அ)மாகாணசபைகள் சட்டத்தின் இருபத்தேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்தினால் நடப்பு நிதியாண்டிற்கான குறிப்பிட்ட ஒரு சேவைக்கெனச் செலவிடப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தொகை அவ்வாண்டின் நோக்கங்களுக்கென போதியதாக இல்லாதிருக்க காணப்பட்டால் அல்லது அவ்வாண்டுக்கென ஆண்டு நிதிக்கூற்றில் சிந்திக்கப்படாத ஒரு புதிய சேவை மீதான குறைநிரப்பு அல்லது மேலதிக செலவினத்திற்கென நடப்பு நிதியாண்டுக்காலத்தில் தேவையொன்று எழுந்திருக்கும்போது அல்லது

(ஆ)அச்சேவைக்கெனவும் அவ்வாண்டுக்கெனவும் வழங்கப்பட்ட தொகையை விஞ்சி ஒரு நிதியாண்டுக் காலத்தில் ஏதேனும் சேவையின் மீது ஏதேனும் பணம் செலவிடப்பட்டிருப்பின்,

அச்செலவினத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைக் காட்டுகின்ற வேறொரு நிதிக் கூற்றை மாகாண சபையின் முன்னர் வைக்கப்படுவதற்குச் செய்வித்தல் வேண்டும்.

அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய விஞ்சுகைக்கான கோரிக்கையொன்றை அத்தகைய முன்னைய அங்கீகாரத்துடன் மாகாண சபைக்கு அளிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(தொடரும்)

# ஐ.நா.நிபுணரின் அறிக்கையை இலங்கை நிராகரிப்பு

(கொழும்பு)

மத சுதந்திரம் அல்லது நம்பிக்கை சுதந்திரம் குறித்த ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், ஐநா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்த அறிக்கையில் கூறியிருந்த குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.


கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கைக்கு மேற்கொண்ட ஆய்வுப் பயணத்தின் போது கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையை, சிறப்பு அறிக்கையாளர் அகமட் ஷகீட் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கையில், இலங்கையின் நிலவரங்கள் குறித்து கவலை எழுப்பியிருந்ததுடன் பல்வேறு குற்றச்சாட்டுகளையும் முன்வைத்திருந்தார்.

குறிப்பாக, கடந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர், "இலங்கையின் பாதுகாப்புப்படைகள் வன்முறைக் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட்டதாகவும், வன்முறையைத் தடுக்க அல்லது கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தீவிர கவலை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், ஐ.நா சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை தவறான தகவல்களை உள்ளடக்கியிருப்பதாக இலங்கை அரசாங்கம், நிராகரித்துள்ளது. (ஐ-2)

# 550 உயிரினங்களை கடத்த முயன்ற ரஷ்ய நாட்டுப் பிரஜைகள் கைது



(ஹோர்ட்டன்)

ஹோர்ட்டன் தேசிய சரணாலயத்திலிருந்து பிடிக்கப்பட்ட 23 இனங்களைச் சேர்ந்த 550 உயிரினங்களை மிகவும் சூட்சுமமான முறையில் நாட்டில் இருந்து எடுத்துச் செல்ல முற்பட்ட 3 ரஷ்ய நாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ரஷ்ய பிரஜைகள் மூவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கையில் அழிவடையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ள ஓணான்கள், தேள்கள், தவளைகள், பல்லிகள், நத்தைகள், சிலந்திகள், பாம்புகள் உட்பட 550 உயிரினங்களை பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டிருந்த பெட்டிகளில் அடைத்து அவர்கள் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கையிலேயே வனத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், வனத்துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட உயிரினங்களுள், உயிருடன் இருப்பவற்றை விடுவிப்பதற்கும், ஏனையவற்றை ஆய்வுக்காக அனுப்புமாறும், உயிரினங்களை பிடிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள இரசாயனத் திரவியத்தை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இதன் போது பணிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# அரச வாகனத்தை கையளித்தார் சஜித்!



(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அரச வாகனங்களை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந் நிலையில் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் தனது உத்தியோகபூர்வ அரச வாகனங்களை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஒப்படைத்தார். (ஐ-2)

# பலசரக்கு வகைகளுக்கான ஏற்றுமதி செலவுகளைக் குறைக்க ஆய்வு நிலையம்

(கொழும்பு)

பலசரக்கு வகைகளை ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் செலவுகளைக் குறைப்பதற்காக ஆய்வு நிலையம் ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி சபை இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

சர்வதேச நிதி நிறுவனங்களின் சுமார் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிப்பங்களிப்புடன் இந்த ஆய்வு நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த ஆய்வுகூடம் அமைக்கப்பட்டதன் பின்னர் பலசரக்கு வகைகளை ஏற்றுமதி செய்வோர், எதிர்நோக்கும் பிரச்சி னைகள் மற்றும் செலவுகளைக் குறைப்பதற்கு இயலுமான நிலை ஏற்படுமெனதெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-2)

# கபில சந்திரசேன, மனைவிக்குப் பிணை



(கொழும்பு)

ஸ்ரீலங்கன் விமான சேவையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரின் மனைவி பிரியங்கா நியோமாலி ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நேற்றுப் புதன்கிழமை கோட்டை நீதிமன்றத்தின் நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது அவர்களை தலா 2 பில்லியன் ரூபாய் பெறுமதியான ரொக்கப் பிணையிலும் 2 மில்லியன் பெறுமதியான சரீரப் பிணையில் செல்லும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு எயார்பஸ் வகையிலான 10 விமானங்களைக் கொள்வனவு செய்த கொடுக்கல் வாங்கலின் போது 2 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம் பெற்றுக் கொண்டு, அதனை அவுஸ்திரேலியாவின் வங்கிக்கணக்கொன்றில் வைப்பிட்டு நிதி தூய்தாக்கலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதனையடுத்து கடந்த 6 ஆம் திகதி சந்தேக நபர்கள் குற்றப் புனனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகிய போது கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# சீனப் பிரஜையின் சடலம் கண்டெடுப்பு!



(புத்தளம்)

புத்தளம், கருவெலகஸ்வெவ மகா மதவாச்சி பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து சீனப் பிரஜை ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

இலங்கை பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்ட 65 வயதான சீனப் பிரஜை ஒருவரின் சடலமே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமான சீன நாட்டுப் பிரஜை வீட்டில் தனியாக வாழ்ந்து வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சீனப் பிரஜையின் உயிரிழப்பிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் இம்மரணம் குறித்து புத்தளம் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் கருவெலகஸ்வெவ பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# கொரோனாவிற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு

## சீன ஜனாதிபதியின் மனைவி இலங்.மாணவர்களுக்கு நன்றிக் கடிதம்

(பீஜிங்)

சீன ஜனாதிபதி ஜின்பிங்கின் மனைவி பெங் லியுவான் இலங்கையில் உள்ள பெண்கள் பாடசாலை மாணவர்கள் குழுவிற்கு தனது நன்றியைத் தெரிவித்து கடிதம் ஒன்றினை எழுதினார்.

சீனாவில் கொரோனா வைரஸிற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக மாணவர்கள் குழு கடந்த திங்களன்று ஓவியங்கள் சிலவற்றை வரைந்தும், கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்தனர்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக குறித்த மாணவர்களுக்கு சீன ஜனாதிபதியின் மனைவி நன்றி தெரிவித்து பதில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த ஓவியங்கள் சீன மக்களை கொரோனாவின் பாதிப்பில் இருந்து மீண்டெழுவதற்கு ஊக்குவிக்கும் என கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர் இலங்கை மக்களின் நேர்மையான நட்பை நிரூபிக்கும் அன்பும் இதில் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.



அந்த வகையில் இவ்வாறான செயற்பாடுகள் சீனா - இலங்கைக்கிடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் எனவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டார்.

இந்நிலையில் சீனாவில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததிலிருந்து இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினரும் தன்னிச்சையாக சீனாவுக்கு ஆதரவும் தமது பிரார்த்தனைகளையும் தெரிவித்து வருவது வரவேற்புள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் இது எமக்கு ஆறுதல் தரும் விடயமாகவும் இருப்பதாக மேலும் குறிப்பிட்டார். (ஐ-2)

# தனித்து தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவது தொடர்பில் ஆராயப்படுகிறது

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

தனித்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து ஆராய்ந்து வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பாக இதுவரையில் எவ்விதமான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் அல்லது கலந்துரையாடல்களில் நாம் ஈடுபடவில்லை.

போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னரே பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கூட்டணி அமைத்திருக்கிறது. எனவே பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து இரு தரப்பும் கலந்துரையாடிய பின்னரே தீர்மானம் எடுக்கப்படும்.



அதேவேளை கூட்டணி அல்லாமல் கட்சி ரீதியான பிரசாரங்களை முன்னெடுக்கும் போது சில மாவட்டங்களில் தனித்து செயற்பட வேண்டியிருக்கும்.

எவ்வாறிருப்பினும் எமது இலக்கு ஜனாதிபதித் தேர்தலைப் போன்றே பொதுத் தேர்தலிலும் வெற்றி பெறுவதேயாகும்.

வெகு விரைவில் இரு தரப்பும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெறும் தினம், மாவட்டம் என்பன தொடர்பாக அறிவிக்கப்படும்' என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## கபே அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

சட்டத்திற்கு மதிப்பளித்து தேர்தலை சுயாதீனமாக நடத்த வேண்டிய பொறுப்பு அனைத்துக் கட்சிகளுக்கும் உள்ளது என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாஸ் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் குறித்து வெளியிட்டுள்ள விசேட அறிக்கை ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'பொதுத்தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வமான தீர்மானங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பிரதான அரசியல் கட்சிகள் இம்முறை கூட்டணியமைத்து தேர்தலில் போட்டியிடுவதால் அவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகவே உள்ளன.

கூட்டணி என்ற அடிப்படையில் ஒன்றிணையும் போது மாறுபட்ட கருத்துக்கள் தோற்றம் பெறும். ஆகவே இவ்விடயம் தொடர்பாகவும் கபே அமைப்பு அதிக கவனம் செலுத்தும். தேர்தல் சட்டத்திற்கு மதிப்பளித்து அமைதியான முறையில் பொதுத் தேர்தலை நடத்தும் பொறுப்பு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் உண்டு.

தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த காலத்தில் இருந்து முன்னெடுக்கப்படும் தேர்தல் பிரசாரங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் தேர்தல் சட்டத்திற்கு உட்பட்டதாக காணப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பாகவும் அரசியல் கட்சி தலைவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

தமிழ், சிங்களப் புத்தாண்டு நிறைவு பெற்றதைத் தொடர்ந்து பொதுத்தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி இடம்பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் ஏற்படும் முரண்பாடுகள் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையாக மாற்றமடையும். ஆகவே தேர்தல் வன்முறைகள் தொடர்பாக அதீத கவனம் செலுத்தப்படும்.

நிறைவு பெற்ற தேர்தல்களில் சமூக வலைத்தளங்கள் மீது மாறுபட்ட விதத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. இவ்விடயங்கள் குறித்தும் விசேட அவதானம் இம்முறை செலுத்தப்படும்.

ஊடகங்கள் சுயாதீனமான முறையில் சுதந்திரமாக தங்களின் சேவையினை முன்னெடுப்பதற்கான சூழலை தேர்தல் ஆணைக்குழு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1994


**அஜந்தா**




இதுகள மேய்கிறதுக்கு ரெண்டு எருமை மாட்டை வாங்கி மேய்க்கலாம்...

**மலர்**

ஒரு பறவை மரத்தின் கிளையில்
அமரும் போது
அது எந்த நேரத்திலும்
முறிந்து விடும் என்ற
பயத்தில்
அமருவதில்லை,
ஏன் என்றால்
பறவை நம்புவது
அந்த கிளையை அல்ல
அதன் சிறகுகளை...




**அபிரா**



வாழ்க்கையில் சாதனை படைத்தேன் என்பதை விட யாரையும் வேதனைப் படுத்தவில்லை என்பதே சிறந்தது...

**சுஜீவன்**




**விநுஜா**



என்ன...ஒரு தைரியம்...
என் தட்டில இருக்க வேண்டியதெல்லாம் எனக்கு மேல ஏறி நிக்குதுகள்...

**வின்சன்**




திருக்குறளை போர்டுலே எழுதிட்டு, அவங்களே இதை எழுதினது யார்னு கேக்கிறாங்க...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுபோகத்திற்கான உரத்தை உடன் விநியோகிக்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**பற்றாக்குறைக்கு இடம் வைக்காது எதிர்வரும் சிறுபோகத்திற்கு தேவையான உரத்தினை விவசாயிகளுக்கு உடனடியாக விநியோகிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.**



எதிர்வரும் சில தினங்களில் உரத் தொகுதி நாட்டை வந்தடைய உள்ளது. தாமதமின்றி உரத்தினை விநியோகிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, விவசாயிகளை ஒருபோதும் அசௌகரியத்திற்குள்ளாக்க வேண்டாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

உரத்தினை இறக்குமதி செய்தல், விநியோகித்தல் தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உர இறக்குமதியின்போது எழும் பிரச்சினைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. விநியோகிப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் நியமங்களை பரிசீலனை செய்யும் அறிக்கையை 10 தினங்களுக்குள் பெற்றுக்கொள்ளுமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விவசாயிகள் அதிக அறுவடையை எதிர்பார்த்து அதிகளவு உரத்தினை பயன்படுத்துகின்றனர். இரசாயன உரங்களை பயன்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகள் குறித்து விவசாய சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, படிப்படியாக கூட்டுரத்திற்கு அவர்களை மாற்ற வேண்டியது பற்றியும் விளக்கினார். அதற்காக விவசாயிகளை தெளிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கூட்டுரத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் தொடர்பில் மக்கள் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். சந்தையில் உள்ள தேவை மற்றும் ஆரோக்கியமான எதிர்கால தலைமுறைக்கு கூட்டு உர உற்பத்திகளை அதிகரிப்பதனை காலந்தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் நியமங்களுக்கேற்ப உரத்தினை உற்பத்தி செய்யும் நாடுகளை இனங்கண்டு உரம் இறக்குமதி செய்யப்பட வேண்டும். நெற் பயிர்ச்செய்கை உட்பட வருடாந்தம் பயிரிடப்படும் பயிர்கள் மற்றும் அவற்றின் அளவுகளை சரியாக அறிந்து தேவையானளவு உரத்தினை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆட்டிகல உட்பட முக்கியஸ்தர்கள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ஜ-2)

## பல்கலை. அனுமதிக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணி இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2019/2020 பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் பணி இன்று முதல் ஆரம்பமாக இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரியந்த பிரேமகுமார தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பொறுப்பேற்கப்படும் எனவும் விண்ணப்பங்களை ஒன்லைன் மூலமும் சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான வழிகாட்டி நூல் இன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும் அங்கீகரிக்கப்பட்ட நூல் விற்பனை நிலையங்களிலும் மாணவர்களால் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். (ஜ-2)

## முகக்கவசங்கள் பற்றாக்குறை

(கொழும்பு)

இலங்கையில் தட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ முகக் கவசங்கள் காரணமாக வைத்தியசாலைகளில் அமைந்துள்ள மருந்தகங்கள் தற்போது நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

இந்த நெருக்கடி தொடர்பில் கருத்துத் தெரிவித்த அரச மருந்தகங்கள் கூட்டுத் தாபனத்தின் நிர்வாக இயக்குநர் லலித் ஜயகொடி கூறுகையில்,

மருத்துவ முகக் கவசங்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

இருப்பினும், சீனாவில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததன் காரணமாக இந்த இறக்குமதி நிறுத்தப்பட்டது.

எமது நாடு மாத்திரமன்றி சீனாவில் கூட தற்போது மருத்துவ முகக்கவசங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

காரணம் மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் முக்கிய தொழிற்சாலைகள் ஹூபே மாகாணத்தில் அமைந்துள்ளன.

இது கொரோனா வைரஸ் பரவலின் மையமாகும் என்றும் சுட்டிக்காட்டினார். (ஜ-2)

## கொரோனா பரவலைக் குறைத்தல்; சிறந்த மருத்துவ பராமரிப்பே காரணம்

### சுகாதார மேம்பாட்டு பணியக மருத்துவ நிபுணர் தெரிவிப்பு



(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கம் இலங்கையில் பரவுவதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்படுவதற்கு இந்நாட்டில் நிலவும் கடும் உஷ்ண காலநிலை எவ்விதத்திலும் காரணமல்ல என்று சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டு பணியக மருத்துவ நிபுணர் பிரியங்கா ரணசிங்க தெரிவித்தார்.

வறண்ட காலநிலை, கடும் உஷ்ணம் மற்றும் அவை சார்ந்த சுகாதார பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளுதல் தொடர்பில் சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகளாவிய ரீதியில் கொரோனா என்கிற கொவிட் - 19 வைரஸ் தாக்கம் தீவிரமாகப் பரவி வருகின்ற போதிலும் இந்நாட்டில் அதன் பரவுகை மிகவும் குறைவாக இருப்பதற்குத் தற்போது இங்கு நிலவும் கடும் உஷ்ண காலநிலையே காரணம் என்ற கருத்து இந்நாட்டு மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

ஆனால், அக்கருத்தை உறுதிப்படுத்த மருத்துவ அறிவியல் ரீதியிலான எந்தச் சான்றும் கிடையாது. இங்கு இவ்வைரஸ் தாக்கம் மிகவும் குறைவாக இருப்பதற்கு இங்கு காணப்படும் சிறந்த சுகாதார மருத்துவ பராமரிப்புத்தான் அடிப்படைக் காரணம்.

ஆனாலும் நாம் தொடர்ந்தும் விழிப்புணர்வுடனும் முன்னவதானத்துடனும் செயற்பட வேண்டும். இது தொடர்பில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளான நோயாளர் இருமும் போது வெளியாகும் சளித்துகள்கள் ஊடாகப் பரவுகிறது.

அத்துடன் பொது இடங்களில் இருக்கும் போது கண், மூக்கு, வாய், முகம் என்பவற்றை அடிக்கடி தொடுதல், பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு செல்லுதல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் காய்ச்சல், இருமல், தடிமல், தொண்டை நோ, மூச்செடுப்பதில் சிரமம் போன்றவாறான அறிகுறிகள் தென்பட்டால் தாமதியாது பொதுமக்கள் கூடும் இடங்களுக்கு செல்வதைத் தவிர்த்து மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ஜ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 95 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 140 | 130 | 150 |
| தக்காளி | 140 | 120 | 140 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 | 100 |
| கோவா | 80 | 140 | 120 | 110 | 120 |
| கரட் | 150 | 160 | 200 | 180 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 110 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 240 | 210 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 160 | 200 | 180 |
| பாகற்காய் | 160 | 160 | 160 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 160 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 | 70 | 120 |
| லீக்ஸ் | 150 | 180 | 200 | 190 | 150 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 200 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 80 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | — | 70 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 60 | 25 | 30 |
| தேசிக்காய் | 100 | 70 | 60 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 160 | 140 | 90 | 160 |
| முள்ளங்கி | 20 | 80 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | — | — | — | 100 | 100 |




# ஆந்தைகளின் மொழி



அன்று காலை, அக்பரைப் பார்த்தவுடனேயே அவர் அன்று என்ன செய்ய நினைக்கிறார் என்று பீர்பாலுக்குத் தெரிந்து விட்டது. குதிரைச் சவாரிக்கேற்ற உடையை அவர் அணிந்திருந்தார். வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் வேறு எங்கும் பார்க்காமல் ஆயுதங்களின் மீதே மிகவும் கவனமாக இருந்தார்.

அக்பர் அன்று வேட்டையாடத் திட்டமிட்டிருக்கிறார் என்று பீர்பால் புரிந்து கொண்டார். வேட்டையாடுவது அக்பருக்கு மிகவும் பிடித்த பொழுதுப் போக்கு! ஆனால் அவர் வேட்டை ஆடுவது பீர்பாலுக்குப் பிடிக்கவில்லை. அதை எப்படித் தடை செய்வது என்பதைப் பற்றியே அவர் சிந்திப்பார்.

சிறிது நேரங்கழித்துத் தன் கவனத்தை ஆயுதங்களிலிருந்து விடுத்து, பீர்பாலின் மீது செலுத்திய அக்பர் "நான் இன்று என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?" என்று பீர்பாலைப் பார்த்துக் கேட்டதும், "மற்றவர்களின் மனதிலுள்ளதை அறிந்து கொள்ளும் திறமை எனக்குக் கிடையாது" என்றார் பீர்பால்.

"பொய் சொல்லாதே, பீர்பால்! நான் என்ன செய்யப் போகிறேன் என்று உனக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமென்றே தெரியாதது போல் நடிக்கிறாய். மிதமான குளிர் வீசும் இந்தக் காலைப் பொழுதில் வேட்டை ஆடச் சென்றால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என் கருத்து! உன் கருத்து என்னவோ?" என்றார். "தங்களின் கருத்தே என்னுடைய கருத்தும்!" என்றார் பீர்பால். "அப்படியானால் நீயும் என்னுடன் வேட்டையாட வர வேண்டும்!" என்றார் அக்பர்.

"தங்கள் கட்டளைப்படி நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்று பணிவுடன் பீர்பால் பதிலளித்தார். "பீர்பால்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை. நாவில் உனக்கு இத்தனை வலிமையைக் கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா? என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்" என்றார். "ஆகட்டும் பிரபு!" என்றார் பீர்பால்.

சிறிது நேரத்திற்குப்பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீர்பாலும் அக்பருடன் சென்றார். காட்டினுள் நுழைந்தபிறகு, அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்த சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும் மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சல் அடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்த போது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன் மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது. புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாகமுற்றுக் கையை உயர்த்திக் கூச்சலிட, சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வுவெடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பாலுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன. அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்ந்து இருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.

அவற்றின் ஒலியை வெகு நேரம் உன்னிப்பாகக் கவனித்த அக்பர், "இந்த ஆந்தைகளின் மொழி நமக்குப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!"

"பிரபு! அவற்றின் மொழி எனக்குத் தெரியும்!" என்றார் பீர்பால். "அப்படியா? பிறகு ஏன் சும்மாயிருக்கிறாய்? அவை என்ன பேசுகின்றன என்று உடனே சொல்!" என்றார் அக்பர். "பிரபு! அவையிரண்டில் ஒன்று மணப் பெண்ணின் தந்தை! மற்றொன்று பிள்ளையின் தந்தை! அவை வரதட்சனையைப் பற்றி விவாதம் செய்து கொண்டு இருக்கின்றன. பிள்ளையின் தந்தை மிருகங்களே இல்லாத நாற்பது காடுகள் சீர்வரிசையாகத் தர வேண்டும் எனக் கேட்கிறது. பெண்ணின் தந்தை தன்னால் இருபது காடுகள் மட்டுமே தரமுடியும் என்று சொல்கிறது" என்றார் பீர்பால்.

தொடர்ந்து, "பெண்ணின் தந்தையான அந்த ஆந்தை மேலும் தனக்கு ஆறு வாரகாலம் அவகாசம் தந்தால், மீதி இருபது காடுகளையும் ஏற்பாடு செய்ய முடியும் என்கிறது" என்றார். "இது என்ன உளறல்? மிருகங்களே இல்லாத காடுகள் அதற்கு எங்கிருந்து கிடைக்கும்? இருபது காடுகள் தருவதாக அது எப்படி ஒப்புக் கொண்டது?" என்றார் அக்பர்.

"அது உளறவில்லை! சரியாகத்தான் சொல்கிறது. நீங்கள் இருக்கும் தைரியத்தில்தான் அது அப்படிப் பேசுகிறது!" என்றார் பீர்பால். "சரிதான்! ஆந்தைதான் உளறுகிறது என்று நினைத்தால் நீயும் உளறுகிறாயே!" என்றார் அக்பர். "நான் உளறவில்லை, பிரபு! ஆந்தையும் உளறவில்லை! நீங்கள் ஒருமுறை வேட்டையாட வந்தாலே, காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தும் கொல்லப்பட்டு விடுகிறது.

அதுபோல் இதுவரை நீங்கள் இருபது காடுகளை மிருகங்களேயில்லாமல் செய்து விட்டீர்கள். இன்னும் அடுத்த ஆறு வாரத்தில் நீங்கள் இருபது முறை வேட்டையாடினால், மீதியுள்ள இருபது காடுகளும் காலியாகி விடும்! அந்த தைரியத்தில்தான் அந்த ஆந்தை அவ்வாறு கூறுகிறது!" என்றார் பீர்பால்.

பளீரென முகத்தில் அறைந்ததுபோல் இருந்த பீர்பாலின் விளக்கம் அக்பரை மௌனமாக்கி விட்டது. தன் செய்கைக்கு முதன் முதலாக வெட்கித் தலை குனிந்த அக்பர், "பீர்பால்! என் கண்களை நீ இன்று திறந்து விட்டாய்! என்னுடைய மகிழ்ச்சிக்காக காட்டில் வாழும் மிருகங்களைக் கொன்று குவிப்பது ஈனமான செயல் என்று புரிந்து கொண்டேன். இன்று முதல் வேட்டையாடுவதை நிறுத்தி விடப் போகிறேன்" என்றார் அக்பர்.

பீர்பாலுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. இத்தனை எளிதாக அக்பரின் மனம் மாறும் என்று அவர் நினைக்கவில்லை. "பீர்பால்! என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் இப்போது சொன்னதைக் கேட்டு அந்த ஆந்தை என்ன சொல்கிறது என்று எனக்குச் சொல்!" என்றார் அக்பர்.

"சக்கரவர்த்தியின் மனம் மாறிவிட்டதால், இனி என்னால் மிருகங்கள் அற்ற காடுகளை வரதட்சனையாக அளிக்க முடியாது என்று அது கூறுகிறது!" என்று பீர்பால் கூறவும், அக்பர் பலமாகச் சிரித்தார்.

## விடுகதைகளும் விடைகளும்

- பகலில் துயிலுவான் இரவில் அலறுவான்.

**ஆந்தை**

- மணி அடித்தால் மலைப்பாம்பு நகரும்.

**புகைவண்டி**

- விரிந்த ஏரியிலே வெள்ளோட்டம் மிதக்குது.

**சந்திரன்**

- கொத்தரோ தச்சரோ கட்டாத கோபுரம் சின்னதாயிருக்கும் சித்திரக் கோபுரம்.

**புற்று**

- எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக் குடை பிடித்து வருகிறார் துரை மகனார்.

**நண்டு**

- ஒற்றைக் கண்ணன் ஒற்றைக்காலன், ஓடி ஓடி வேலி அடைக்கிறான்.

**ஊசி**

- இலையுண்டு கிளையில்லை. பூ உண்டு மணமில்லை. காய் உண்டு விதையில்லை. பட்டை உண்டு கட்டை இல்லை. கன்று உண்டு பசு இல்லை.

**வாழை**

- உள்ளூர் மணியக்காரருக்கு உள்ளங்கை ஓட்டை.

**உறி**

- ஆற்று மணலை அள்ளித் தின்போம் நாங்கள் ஒரு சாதி. வெள்ளைக் கல்லை உடைத்துத் தின்போம் நாங்கள் ஒரு சாதி. ஓணானை உரித்துத் தின்போம் நாங்கள் ஒரு சாதி.

**சர்க்கரை, கற்கண்டு, வாழைப்பழம்**

- அந்தரத்தில் தொங்குது செம்பும் தண்ணீரும்.

**இளநீர்**

- ஊசி போல் இலையிருக்கும் ருத்ராட்சம் போல் காய்காய்க்கும்.

**சவுக்குமரம்**

- பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது.

**கருவிழி**

- அடர்ந்த காட்டின் நடுவிலே ஒரு பாதை.

**வகிடு**


- இதயம் போல் துடிப்பிருக்கும். இரவு-பகல் விழித்திருக்கும்.

**கடிகாரம்**

### மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

இதுவும் சற்றே திரிந்த பழமொழிதான். "மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?" என்பதுதான் பழமொழி. குதிர் என்றால், ஆற்று வெள்ளத்தில் தற்காலிகமாக ஏற்பட்ட மணல்மேடு. அதில் கால் வைத்தால், நாம் ஆற்றில் மூழ்கி விடுவோம். அதனால் மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கக்கூடாது என்ற எச்சரிக்கைதான் இது. மற்றப்படி, குதிரைக்கும் இந்தப் பழமொழிக்கும் ஒரு தொடர்பும் கிடையாது.

## புள்ளிக்கோட்டை இணைத்து உருவைக் கண்டுபிடியுங்கள்



சுகத்தை தருவது நல்ல
மனம் உள்ளவர்களின் நட்பு....

- யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நின்று நிதானமாய் சிந்தித்துச் செயற்படுக!

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு தேர்தல் களம் சூடாகி விட்டது.

தாம் தயார் செய்த வேட்பாளர் பட்டியல்களை அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் அறிவிக்கவுள்ளன. இவை நாடளாவிய ரீதியான பொதுவிடயம்.

மாறாக வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் தேர்தல் களம் எவ்வாறாக இருக்கும் என்று ஆராய்ந்தால், முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் தேர்தல் களத்தில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் இறங்கவுள்ளன.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் கன்னை பிரிந்து பிரசாரம் செய்யும்போது, ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சனம் செய்வதான நிலைமைகள் உருவாகும் என்பது தவிர்க்க முடியாத உண்மை.

இதற்கு அப்பால், ஊடகங்கள் கூட தத்தம் சார்புநிலைகளை அறம் பிழைத்து வெளிப்படுத்த முற்படும் என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

இவ்வாறாக எதிர்வரும் பொதுத் தேர்தல் பிரசாரங்கள் அனல் பறப்பதாக இருந்தாலும் யாரைத் தெரிவு செய்வது என்ற முடிவை எடுக்கின்ற நீதியாளர்களாக தமிழ் மக்கள் இருப்பர்.

இதற்கு மேலாக, யார் என்னதான் கத்திக் குளறினாலும் எனது வாக்கு இவருக்குத் தான் என்ற அழுங்குப்பிடியோடு இருப்பவர்களும் இல்லாமல் இல்லை.

எதுஎவ்வாறாயினும் இம்முறை இடம்பெறப் போகும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் மிக நிதானமாகச் சிந்திக்க வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

அதாவது யாருக்கு வாக்களிப்பது என்பதற்கு முன்னதாக, நாம் வாக்களிப்பவர் எவ்வாறானவராக இருக்க வேண்டும் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

அதேநேரம் நாம் வாக்களிக்காமல் கைவிடுவதிலும் நியாயமான காரணங்கள் உள்ளதா என்பதையும் ஆராயுங்கள். அவர் சொல்லிவிட்டார். இவர் உறுதிமொழி தந்துவிட்டார் என்பவற்றை உங்கள் அறிவுடமை கொண்டு அதன் உண்மைத்தன்மைகளைப் பகுப்பாய்வு செய்யுங்கள். நன்மை தீமைகளை ஆராயுங்கள். நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகின்றீர்களோ அவர்களின் நம்பகத்தன்மை தொடர்பில் அதிகூடிய கவனம் செலுத்துங்கள்.

தேர்தல் காலத்து ஆசாடத்தனங்கள், சதி வேலைகள், கபடத்தனங்கள், உண்மைக்குப் புறம்பான கதைகட்டல்கள் இவை அனைத்தினதும் மெய்ப்பொருளைத் தேடுங்கள்.

நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் தமிழ் இனத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது என்ற உண்மையை உணர்ந்து வாக்களிக்கும் உங்கள் தார்மீகக் கடமையை நிறைவேற்றுங்கள். அதுவே சொன்னோம் சுகம்.

கடந்த கால தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல்

# கூட்டமைப்பு மீண்டும் மக்கள் ஆணையை கோருவதனை ஏற்றுக்கொள்ள முடியாது

**சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு**

(யாழ்ப்பாணம்)

கடந்த கால தவறுகளைத் திருத்திக் கொள்ளாமல், மீண்டும் தங்களுக்கு மக்கள் ஆணை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோருவதானது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிததார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கொழும்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருத்து தெரிவித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பேரம் பேசுவதற்காக 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் கொடுக்கவேண்டும் என கூறியிருக்கின்றார்.

ஆனால் கடந்த 10 வருடங்களாக பேரம் பேச தவறியது எதற்காக? என்ற கேள்விக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இன்றளவும் விளக்கமளிக்கவில்லை. இப்போது பேரம் பேசும் சக்தியை கொடுங்கள் என கேட்கிறார்கள்.

போருக்கு பின்னர் 10 வருடங்களில் தமிழ் மக்கள் பெரும் ஒத்துழைப்பை வழங்கினார்கள். எதிர்க் கட்சி அந்தஸ்த்தும் கூட தமிழ்தேசிய கூட்டமைப்பினருக்கு கிடைத்திருந்தது

அப்போதும் பயன்படுத்தவில்லை. மேலும் வரவு செலவு திட்டத்தின்போதும், ஆட்சி கவிழ்ப்பின் போதும் கூட பேரம் பேசுவதற்கான மிக சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

ஆனாலும் அதனை பயன்படுத்தவில்லை. ஆகவே பேரம் பேசுவதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்த தவறியது எதற்காக? என்பதை கூட்டமைப்பு கூற வேண்டும்.

மேலும் கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டு இப்போது பேரம் பேச சந்தர்ப்பம் கேட்பது கதிரையை நிரப்பும் வேலை மட்டுமேயாகும். அதனால் பேரம் பேசல் நடக்காது' என்பதே உண்மை" என்றார். (ம)

# வாளுடன் மேலும் மூவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் வேப்பங்குளம் பகுதியில் வாளுடன் இருவரை கைது செய்து ள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது நேற்று வாளுடன் மேலும் மூவர் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு தினங்களில் வவுனியாவில் இரண்டு வாளுடன் ஐந்து இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவர்களிடம் தொடர்ந்தும் விசா ரணைகள் இடம் பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(ம-299)

# முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 12 பேர் வெளிநாடு செல்லத்தடை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட 12 பேர் வெளிநாடு செல்ல தடை விதித்து கொழும்பு கோட்டை நீதவான் ரங்க திசாநாயக்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

பிடியாணை பிறப்பிப்பது தொடர்பில் எதிர்வரும் 6 ஆம் திகதி உத்தரவிடப்படவுள்ளது.

12 சந்தேகநபர்களையும் கைது செய்வதற்கான பிடியாணையை பிறப்பிக்குமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் சிரேஷ்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர நீதவானிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கை தொடர்பில் உத்தரவிட முன்னர், ரவி கருணாநாயக்க தொடர்பில் விடயங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு, அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்ஷி அரச குலரத்ன நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

எனினும், கோட்டை நீதவான் ரங்க திசாநாயக்க இந்த கோரிக்கையை நிராகரித்தார்.

சந்தேகநபர்களுக்கு பிடியாணை அல்லது அறிவித்தல் விடுப்பதற்கு முன்னர் சாட்சி விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்த நீதவான், முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பெண் அதிகாரி தர்மலதா சஞ்ஜீவனி கெப்பட்டிபொலவிடம் சாட்சியம் பெற்றுக் கொண்டார்.

இந்த சம்பவம் தொடர்பிலான ஏனைய சந்தேகநபர்களாக கசுன் பலிசேன, ஜெஃப்ரி ஜோசப் அலோசியஸ், ரஞ்சன் ஹீலுகல்ல, முத்துராஜா சுரேந்திரன், அஜான் புஞ்ஜிஹேவா, புத்திக சரத்சந்திர, சங்கரப்பிள்ளை பதுமநாதன், இந்திக சமன்குமார ஆகியோரும் பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனமும் பெயரிடப்பட்டுள்ளது. (ம)

# இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

(வவுனியா)

இலங்கையில் பரவி வரும் சிறுநீரக நோய் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு பெறும் வகையில் வவுனியா வர்த்தகர் சங்கம், சிறுநீரக நோய் தடுப்பு பிரிவினருடன் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்இன்று (05.03.2020 தொடக்கம் 06.03.2020) வரையான காலப்பகுதியில் காலை 9 மணி தொடக்கம் வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வர்த்தக சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

வருபவர்கள் உங்கள் வரவை முன்கூட்டியே 02 42225479,0766628386 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் உறுதிப்படுத்துமாறு வர்த்தக சங்கத்தினர் கேட்டுநிற்கின்றனர்

(ம-299)

# க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறு இம்மாத இறுதியில்

**தரவரிசையும் இம்முறை இல்லை**
**பரீட்சை திணைக்களம் தெரிவிப்பு**

(கொழும்பு)

க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறு இம் மாத இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாணவர்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட ரீதியிலான நிலை மற்றும் தேசிய நிலை இம்முறை வெளியிடப்படமாட்டாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத்பூஜித தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு டிசெம்பர் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 7 இலட்சத்து 17 ஆயிரத்து எட்டு பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளி காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில** முகத்தாங்குளம் 2ம் வட் டாரம், சாளம்பைக்குளம், கோவில புதுக்குளம் கிராமம் சூடு வெந்தபுலவு கிராமம், பம்பைமடுவிலிருந்து குருக்கள புதுக்குளம் வரை, வவுனியா தொழில்நுட்பகல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம், வேளாங்குளம் விமானப்படை முகாம் ஆகிய இடங்களிலும், **மன்னார் பிரதேசத்தில்** ,சைமழைத்தாழ்வு, நரிக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**புத்தகங்களை மரியாதையுடன் போற்றும் வீடுகளில்தான் நன்னெறி நல்லொழுக்கம் மற்றும் கடின உழைப்பாளர்கள் வளர்வார்கள்.**

-சுகோம் விக்கி

# சத்திய தரிசனம்

## முடிவு 'அவன்' கையில்



❖ அன்பை அதிகமாக வெளிப்படுத்துங்கள். குறைவாகப் பேசுங்கள். உண்மையான சேவையில் ஈடுபடுங்கள். இவை தான் தியானத்தின் அடையாளங்கள்.

❖ முதலில் கடவுள், அடுத்தது உலகம், கடைசியாக "நான்" என்ற அடிப்படையில் மனிதன் வாழ வேண்டும் . ஆனால், இன்றோ முதலில் நான், அடுத்து உலகம், கடைசியாக கடவுள் என்ற வரிசையில் மனிதன் சிந்திக்கத் தொடங்கி விட்டான்.

❖ வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதையும் தியானத்திற்காகப் பயன்படுத்துங்கள். அன்றாடம் வீட்டைச் சுத்தம் செய்யும் போது, இதயவீட்டையும் சுத்தப்படுத்தினால் அதுவே தியானமாகி விடும்.

❖ மனிதனுக்கு முயற்சி அவசியம். அதேநேரம், அந்த முயற்சியின் முடிவும் வெற்றி தோல்வியும் கடவுளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்பதை மறந்து விடாதே.

❖ அழுக்குத் துணியை நீராலும், சோப்பாலும் வெண்மையாக்குவது போல அழுக்காக இருக்கும் மனதை பக்தி என்னும் நீராலும், நேர்மை என்னும் சோப்பாலும் பளிச்சிடச் செய்யுங்கள்.

# அரச திணைக்களங்களுக்கிடையிலான துடுப்பாட்டம் சம்பியனாகியது யாழ்.மாநகர சபை அணி

உள்ளூராட்சி மாதத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் அரச திணைக்களங்களுக்கிடையே நடத்தப்பட்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று நிகழ்வு வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் இறுதிச் சுற்றுக்குத் தேர்வாகியிருந்த வல்வெட்டித்துறை நகரசபை அணியினர் மற்றும் யாழ்.மாநகர சபை அணியினருக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் யாழ்.மாநகரசபை அணியினர் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர், வலி.வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், யாழ்.மாநகரசபை பிரதி முதல்வர், விளையாட்டில் பங்கு கொண்ட திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் பார்வையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(க-106)



# பாடசாலைகளுக்கிடையிலான எல்லே போட்டி சாவகச்சேரி இந்துக் கல்லூரி சம்பியன்

தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேப் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி சம்பியன் ஆகியது.

வரணி மத்திய கல்லூரியில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே போட்டிகளில் 8 அணிகள் பங்குபற்றின. முதலாவது போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் பாடசாலையை தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அரை இறுதியில் கைதடி முத்துக்குமாரசாமியுடன் மோதியது. முத்துக்குமாரசாமி 30 பந்துகளில் 2 ஓட்டங்கள் பெற்றனர். அதனை இந்து பாடசாலை சுலபமாக 10 பந்துகளில் 3 ஓட்டங்களை அடித்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.



இறுதிப்போட்டியில் மட்டுவில் மகாவித்தியால அணியுடன் மோதியது. முதலில் துடுப்பாடிய சாவகச்சேரி இந்து அணியினர் 30 பந்துகளில் 10 ஓட்டங்களை பெற்றனர். அதனை எதிர்த்து துடுப்பாடிய மட்டுவில் பாடசாலை எந்த ஓட்டத்தையும் பெறமுடியாமல் போக சாவகச்சேரி இந்து அணியினர் வலய சம்பியன் ஆகி மாகாணமட்டம் தெரிவாகினர். கடந்த பல வருடங்களாக மாகாணமட்டத்தில் எல்லே போட்டியில் சாவகச்சேரி இந்து சாதித்து தேசிய மட்டப்போட்டிகளில் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# தேசிய இளைஞர் சேவை மன்ற விளையாட்டு பிரதம மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பு







தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடம்தோறும் நடத்தி வருகின்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழாவினுடைய 31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா கடந்த 27 ஆம் திகதி வடமத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பங்கு பற்றலுடன் ஆரம்பமாகியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த விளையாட்டு விழா தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடைய தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான சட்டத்தரணி தெஷார ஜயசிங்ஹ தலைமையில் மாலை 3 மணியளவில் ஆரம்பமாகியுள்ளது.

விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு ஆசி கூறி விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பாகங்களையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இந்த விளை யாட்டு விழாவில் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்விழாவில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வடமத்திய மாகாண ஆளுநர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தினுடைய உயரதிகாரிகள் இளைஞர், யுவதிகள், பொது மக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு கருத்துரை வழங்கிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு விழாக்களின் ஊடாகத் தான் தேசிய ரீதியில் சர்வதேச ரீதியில் சாதிக்கக் கூடிய விளையாட்டு வீரர்களை இனம் காணக் கூடியதாக இருக்கின்றது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை சிறப்பாக பயன்படுத்துமாறும் நீங்களும் எதிர்காலத்தில் சர்வதேச மட்டங்களில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றக் கூடிய வாய்ப் புகளை பெற்றுக்கொள்ள வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



சாவகச்சேரி இந்துக்கல்லூரி 20வயது பிரிவு பெண்கள் வலைப் பந்தாட்ட அணி இறுதியில் டிறிபேக் கல்லூரி அணியை 58:17 தோற்கடித்து வலய மட்ட சம்பியன் ஆக தெரிவு செய்யப்பட்டது.

## சம்பந்தன், சுமந்...

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் நேற்றுடன் ஆயிரத்து 111 நாட்களை எட்டியது.

இதனை முன்னிட்டு அவர்களால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும், வெளிநாடு தலையிட்டு எமக்குரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும், உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே, சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு கதறி அழுது தமது கவலையை வெளிப்படுத்தியிருந்தனர்.

உறவுகள் கருத்து தெரிவிக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா போன்றோர் அரசியலிலிருந்து வெளியேறி இளையவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் போர்க்குற்றம் ஒரு சர்வதேச குற்றம். எனவே இது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் அல்லது சர்வதேச தீர்ப்பாயத்தினால் விசாரிக்கப்பட வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் பேரவை வடக்கு கிழக்கு வர வேண்டும். வந்து எங்கள் துயரங்களை நேரில் பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை தாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ம-299)

## வேலையற்ற பட்ட...

ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது இந்த வகை ஆட்சேர்ப்பு நடவடிக்கை ஒரு அரசியல் ஊக்குவிப்பாக இருக்கக்கூடும் என்பதால் இந்த அறிவிப்பை வெளியிடுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் முடிவுறும் வரை அனைத்து அரச நியமனங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நிறுத்தப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த 45 ஆயிரத்து 585 பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

பெறப்பட்ட மொத்தம் 70 ஆயிரம் விண்ணப்பங்களில் 56,000 விண்ணப்பங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதிலும் 45,585 பேர் மட்டுமே நியமிக்க தகுதியுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

## நடந்து சென்ற...

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறை தம்பசிட்டியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பெண்மணி வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த சமயம் பின்னால் வந்தவர்கள் பெண்ணை தள்ளிவீழ்த்தி விட்டு ஐந்தரை பவுண் நிறையுடைய தாலிக் கொடியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## சுயேட்சைக்குழு...

உள்ள தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் சார்பிலேயே இந்தச் சுயேட்சைக் குழு போட்டியிட உள்ளதாக அறிய முடிகிறது. (ம)

## ஐ.நாவிலிருந்து...

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த இரா சம்பந்தன், கடந்த தேர்தல் பிரசாரங்களில் உண்மைக்கு புறம்பாக சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது இருப்பிற்கு ஆபத்து உள்ளது என்ற பிரசாரம் மேற்கொள்ளப்பட்டதனை சுட்டிக்காட்டிய இரா.சம்பந்தன், மனித உரிமை பேரவையின் தீர்மானத்திலிருந்து விலகும் இலங்கை அரசின் முடிவானது நாட்டிற்கு நன்மை பயக்காத ஒன்று எனவும் சுட்டிக் காட்டினார்.

மனித உரிமைகள் தொடர்பில் தமிழ், சிங்கள பேதமோ பிரச்சினைகளோ இல்லை எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், எவரேனும் சர்வதேச மனிதநேய சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களை எவரேனும் மீறியிருப்பின் அத்தகைய நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மனித உரிமை பேரவை யானது இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் மூன்று முக்கிய உள்ளடக்கங்களை கொண்டதாகும் என தெரிவித்த இரா.சம்பந்தன், இலங்கையில் நிலையான சமாதானத்தினை அடைய வேண்டுமெனில் இந்த மூன்று அம்சங்களையும் அடைய வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், உண்மை நிலைநாட்டப்பட்டு நீதியானது நியாயமான ஒரு நீதிப்பொறிமுறைக்கூடாக அடையப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தின் சார்பில் யுத்தத்தினை முன்னெடுத்த அரச படைகள் பொதுமக்கள் தொடர்பில் பொறுப்பும் கடப்பாடும் கொண்டவர்களாக இருத்தல் அவசியமானது என தெரிவித்த இரா.சம்பந்தன், அப்படியாக நடந்து கொள்ள வேண்டியவர்கள் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களிற்கு முரணாக செயற்பட்டிருந்தால் அத்தகையவர்கள் தங்களது நடவடிக்கைகளிற்கு பொறுப்புக்கூறல் அவசியமாகும் எனவும் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் நெதர்லாந்து அரசு தொடர்ந்தும் மீளாய்வு செய்து அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் தெரிவித்தார்.

யுத்த காலத்தின்போது ஒரு அரசியல் தீர்வு தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசாங்கம் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கியிருந்தமையை சுட்டிக் காட்டிய இரா.சம்பந்தன், நீண்டகாலமாக நிலவும் இந்த பிரச்சினைக்கு தீர்வினை காணும் நோக்கில் அந்த வாக்குறுதிகள் மதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்து தீர்வினை கண்டுகொள்ளாத சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு முன்னேற்றம் ஏற்படப் போவதில்லை, பல தசாப்தங்களாக அதிகார பரவலாக்கம் தொடர்பிலான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றது என்பதனையும் சுட்டிக் காட்டினார்.

13வது திருத்தச்சட்டத்திற்கு பிற்பாடு பல்வேறு வரைபுகள் இது தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ளதனையும் அநேக விடயங்களில் பாரியளவு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதனையும் சுட்டிக் காட்டினார்.

வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன், உட்கட்டமைப்பு மற்றும் திறன் அபிவிருத்தி ஆகியனவற்றை உள்ளடக்கிய ஒரு பூரண அபிவிருத்தி திட்ட வரைபொன்று சர்வதேச சமூகத்திற்கு முன்வைக்கப்படும் என தெரிவித்தார். அந்த திட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் தமது பங்களிப்பினை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது பதிலளித்த நெதர்லாந்து தூதுவர், வட கிழக்கு அபிவிருத்திக்கு தமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவதாக தெரிவித்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அச்ச...

இலங்கையின் பல பகுதிகளையும் சேர்ந்த 15 மனித உரிமை பணியாளர்களிடம் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வாக்குமூலங்களை பெற்றுள்ளது.

இதன் போது தொடர்ச்சியான கண்காணிப்புகள் அதிகாரிகள் மட்ட அழுத்தங்கள் காணப்படுவது தெரியவந்துள்ளது.

புலனாய்வு அதிகாரிகள் மனித உரிமை செயற்பாட்டாளர்களிடமும் பாதிக்கப்பட்ட மக்களிடமும் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்விற்கு முன்னர் அவர்களின் திட்டங்கள் என விசாரணை செய்துள்ளனர்.

இந்த நிலைமை காரணமாக எதிர்காலத்தில் சர்வதேச சமூகத்திடம் பிரசாரம் செய்வதும் ஜெனிவா செல்வதும் சாத்தியமாகாது என கருதுகின்றோம் என ஒருவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் மீண்டும் அதிகாரத்திற்கு வந்த பின்னர் இலங்கையில் அச்சசூழல் மீண்டும் ஏற்படுத்தப்படுகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி, மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மீதான வன்முறை தாக்குதல்கள் மற்றும் மரண அச்சுறுத்தல்களில் அரச பாதுகாப்பு இயந்திரத்திற்கு தொடர்பிருப்பது புலனாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணிற்கு தெரியாமல் இடம்பெறும் விடயங்களே ஆபத்தானவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில், பொலிஸ் மற்றும் அரசு சாரா குழுக்களை ஒழுங்குபடுத்தும் தன்னார்வ தொண்டு செயலகம் உள்ளிட்ட பல முக்கியமான சிவில் ஏஜென்சிகள், பொதுமக்கள் தொடர்புடைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன பணியாற்றி வருகிறார்.

கடந்த மூன்று மாதங்களாக, அடையாளம் தெரியாத நபர்கள் ஊடகவியலாளர்களால் பலமுறை தாக்கப்பட்டனர், மேலும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மரண அச்சுறுத்தல்கள் குறித்து நிருபர்கள் விமர்சித்தனர்.

பாதுகாப்பு அதிகாரிகள் ஊடக அலுவலகங்களில் தேடியுள்ளனர். சமூக ஊடகங்களில் மக்கள் "அவதூறு இடுகைகளை" வெளியிடுவதைத் தடுக்க ஒரு புதிய இணைய பாதுகாப்பு சட்டத்தை உருவாக்கியதாக பாதுகாப்பு அமைச்சகம் ஜனவரி 24 அன்று அறிவித்தது. திட்டங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

பல மனித உரிமை ஆர்வலர்களை உளவுத்துறை அதிகாரிகள் பலமுறை தொலைபேசியில் அழைத்து விசாரணை நடத்தியுள்ளனர். அழைப்பாளர் கேள்விகளைக் கேட்கிறார் அல்

▶24

மெகா பவர்
திகதி 2020/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 506
J 25 11 49 56 61

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04-03-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2411
K 42 48 67 75

தன நிதானய
திகதி - 2020.03.04
சீட்டிழுப்பு இலக்கம் - 273
T 16 39 62 64

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04-03-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1023
K 0 5 3 4 7 3

சம்வர்தன வாசனாவ உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 328
சீட்டிழுப்பு திகதி 04.03.2020 நீலம்
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 37 48 70
விதி எண் 4
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.52,844,660
2020/03/05ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 902
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.03.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,980,900/-
09 25 27 54 G

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3309 திகதி: 2020.03.04
பச்சை புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 38 48 55 M
அடுத்த ஜக்பொட் 36,384,901/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 04.03.2020 வெற்றி வாரம் 2788 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் இடபம் 06 31 40 54
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,608,606
ரூ.500 பரிசுக்குரிய 1 1 4 2
ரூ.100 பரிசுக்குரிய 7 1 4
டபல் சான்ஸ் விசேட இல.
2020.03.05 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## அபிவிருத்தி...

சினைகள் ஏற்பட்டதற்கான காரணம் வரப் பிரசாதமற்ற மக்கள் கூட்டத்தினர் பொருளாதாரத்தை சுரண்டியமையுமாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இனம், மதம், மொழி அல்லது வாழும் பிரதேசத்தை கவனிக்காது சமுதாயத்தில் அனைவருக்கும் சமமான பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமாயின் இவ்வாறான பேதங்கள் இலங்கையில் ஏற்படாதென்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

தான் முன்வைத்துள்ள மக்கள்மையப்பட்ட பொருளாதார மாதிரி, இவ்விடயங்களை கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டதாகுமென தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்துறை சார்ந்தவர்களுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொருளாதார முன்னேற்றத்தின் பிரதிபலன்களை மக்கள் அனைவருக்கும் விசேடமாக, வறிய மக்களுக்கு கிடைக்கப் பெறும் என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களை வறிய நிலையிலிருந்து மீட்டெடுத்து, பொருளாதாரத்தின் சிறப்பான பங்காளர்களாக மாற்றி அவர்களின் வாழ்க்கைத்தரத்தை துரிதமாகவும் சிறப்பானதாகவும் முன்னேற்ற வேண்டும்" என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நவீன டிஜிட்டல் யுகத்தின் தேவைக்கேற்ப உயர் தரத்திலான திறமைவாய்ந்தவர்களை உருவாக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தொழிநுட்பத்தை அடிப்படையாகக்கொண்டு பொருளாதாரத்தை மிஞ்சிய விரிவுபடுத்தப்பட்ட தொழில்வாய்ப்புகளுக்கு அவசியமான திறன் அபிவிருத்தியை மக்களுக்கு சென்றடைய செய்யும் சவாலை தமது அரசாங்கம் ஏற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

"எமது பாடசாலை, பயிற்சி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து உருவாகும் தொழிற்படையினருக்கும் தொழிற்சந்தையின் கேள்விக்கும் இடையில் பாரிய தொரு இடைவெளி காணப்படுகின்றது.

இன்று தகவல் தொழிநுட்பத்துறை முகங்கொடுத்துள்ள பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் பற்றாக்குறையை அது எடுத்துக்காட்டுகின்றது.

அதனால் எமது கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கான குறுகிய மற்றும் நீண்டகால தீர்வுகளை பெற்றுக் கொள்வது அவசியமாகும்" என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அரச துறையின் மேலாண்மை தரச் சரிவைப் பற்றியும் குறிப்பிட்ட ஜனாதிபதி, தேவையற்ற கட்டுப்பாடுகளை இலகுபடுத்தி அல்லது நீக்கி தடைகளற்ற பொருளாதார செயற்பாட்டிற்கு வாய்ப்பளிக்கக் கூடிய சூழலை உருவாக்குவது தமது அரசாங்கத்தின் முக்கிய பணியெனவும் இந்த இலக்கை நோக்கி செல்வதற்கு நவீன தொழிநுட்பத்தை பொருளாதாரத்துடன் இணைக்க வேண்டுமெனவும் சுட்டிக் காட்டினார். (ம)

# அரசியல் தொடர்பான அறிவு ஜனாதிபதி கோட்டாவுக்கு இல்லை

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசியல் அறிவு இல்லை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஐ.தே.க தலைமையமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவில் சமூகத்தில் உள்ளவர்கள் அறிவுள்ளவர்களாக இருந்தாலும், அரசியல் அறிவு இல்லாததால் நாடு பாதிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## பயங்கரவாத...

வாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான செல்வராசா உதயசிவம் (வயது-39) என்பவரே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டவரின் மனைவி கருத்து தெரிவிக்கையில்,

மருதங்கேணி பொலிஸாருடன் வந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

எமது பிள்ளைகளை கோட்டமட்ட விளையாட்டு போட்டிக்காக அழைத்துச் சென்று செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் நின்றிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார.

தற்போது கிளிநொச்சியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரிடம் வாக்குமூலம் பெறப்படுகின்றது. கைதுக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளேன் என்றும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இதன்போது கைது செய்யப்பட்ட செல்வராசா உதயசிவம் வடமராட்சி கிழக்கு பிரஜைகள் குழுவின் முன்னாள் செயலாளராகவும் பல்வேறு பொது அமைப்புக்களின் முன்னாள் உறுப்பினராகவும் பதவிகளில் இருந்துள்ளார். (ம)

## தந்தை, மகன்...

தந்தை மகன் இருவரும் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

குறித்த வீட்டில் நேற்று குடும்பத்தினர் இருந்தவேளை இளைஞர் குழு ஒன்று திடீரென நுழைந்து சரமாரியாக வாளினால் வெட்டி தாக்கிவிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-9)

## அச்சமான சூழ்நிலை...

லது அச்சுறுத்தல்கள் அல்லது எச்சரிக்கைகளை வழங்குகிறார்.

ஒரு மனித உரிமை பாதுகாவலர் கூறினார், "எல்லாம் ஒரு முக்கியமான சூழ்நிலைக்கு மாறிவிட்டது. தேர்தலுக்குப் பிறகு கண்காணிப்பு மற்றும் விசாரணைகள் உள்ளிட்ட இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. அவர்கள் எங்களைப் பின் தொடர்கிறார்கள்" என்று மற்றொரு ஆர்வலர் கூறினார். உளவுத் துறை அதிகாரிகள் "பஸ்ஸில் அடுத்த இருக்கையில் கூட இருக்கலாம்" என்று கண்காணிப்பில் இருப்பதாக உணர்கிறேன் என்றார்.(ம)

## காணா...

மடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பாலசுப்பிரம்ணியம் மங்கயர்க்கரசி (வயது -72) என்பவரே சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

இவரது மகனான பா.அருட்செல்வன் இறுதி யுத்த காலப் பகுதியில் ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாக கண்கண்ட சாட்சிகள் கூறியதாக மரணமான தாயார் தெரிவித்திருந்தார்.

இவரது இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் இன்று நடைபெறவுள்ளது. (ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய் • மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)

FLC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France) (C-9389)
40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 14.03.20 சனி 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 ஆரம்பம் :16.03.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Wanted
Qualified English Teachers
Full time, Part time, male or Female.
Age 25 to 55
Call - 9 AM to 5 PM (C-9408)
0777033039, 0704038039

ஓலைச்சுவடி சோதிட நிலையம்
உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ள... சுபம்
தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் (2476) பண்டாரிக்குளம், வவுனியா. 076 328 7119

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (2475)

நெல்லியடியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/= ஜேர்மனி - 640/= இத்தாலி - 690/=
கனடா - 950/= நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9381)





கனேடிய சுற்றுலா விருந்தோம்பல் கற்கை நிலையம்
Hotel Management
ஆரம்பம் 09.01.2020
100% வேலைவாய்ப்பு
வெளிநாட்டில் உயர் கல்வி
ஸ்கில் மைகிரேசன் வாய்ப்பு
0213146171, 0760579999
No.1544, K.K.S Road, Jaffna. (C-9412) CTHI





ஆட்கள் தேவை
எரிபொருள் நிரப்புநர் (ஆண்கள்)
கிளார்க் (பெண்கள்) (C-9408)
076 138 0212

IELTS
Academic
Life skills
British College of higher studies
0212224550 / 0761380212
Sirampiyady lane, Stanley road, Jaffna. (C-9409)

STUDY IN TAMILNADU WITH 100% SCHOLARSHIP FOR SRI LANKAN STUDENTS
Scholarship Entrance Exam on March 07th 2020
Application Closing on March 05th 2020
For Registation Contact: 076 817 0077 | 021 492 7780
B.E. / B.Tech
AERONAUTICAL ENGINEERING
CIVIL ENGINEERING
MECHNICAL ENGINEERING
ELECTRONICS & COMMUNICATION ENGG.
COMPUTER SCIENCE ENGINEERING
INFORMATION TECHNOLOGY
UGC Recognized University Awarded Degree
Excel TAMILNADU, INDIA (C-9401)
POLYTECHNIC
AUTO | MECH
CIVIL | ECE | EEE
COMMERCE & SCIENCE
B.A. English, Tamil | B.C.A. | B.Com. | B.Com-CA
B.B.A. | B.Com. (AF) | B.Sc., Computer Science | Microbiology
Textile & Fashion Designing | Vis.com. | Mathematics | Costume Design & Fashion | Physics | Information Technology | Bio-chemistry





ADMISSION OFFICE கற்பகவனம், 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.